விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 30 ஞாயிற்றுக்கிழமை (14.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 85




## அமெரிக்காவின் குற்றச்சாட்டை இலங்கை பொருட்படுத்தவில்லை

### கெஹெலிய ரம்புக்வெல கருத்து

(கொழும்பு)

அமெரிக்கா முன்வைக்கும் இலங்கை மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டினை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என ரம்புக்வெல கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை அமெரிக்காவின் இராஜாங்க அமைச்சின் மனித உரிமை திணைக்களம் தனது மனித உரிமை மீறல்கள் பற்றிய அறிக்கையினை வெளியிட்டிருந்தது.

அதில் இலங்கை அப்பட்டமான மனித உரிமை மீறல்களை போரின் இறுதி கட்டத்தில் செய்ததாக அமெரிக்கா குற்றம்சாட்டி இருந்தது.

இந்த குற்றச்சாட் (20 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலுக்கு முன் பொன்சேகாவுக்கு தண்டனை

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக சூழ்ச்சித் திட்டம் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

சரத் பொன்சேகா கைது செய்யப்படுவதற்கு முன்னரும் கைது செய்யப்பட்ட பின்னரும் தெரிவிக்கப்பட்ட காரணங்கள் தற்போது அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் உள்ளடக்கப்படவில்லை என ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித் (20 ஆம் பக்கம் பார்க்க)

## பொட்டம்மான் உயிரோடு; கே.பி. சரணடைந்ததே உண்மை

# புலிகளின் சர்வதேச வலையமைப்பு சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது

### புலனாய்வுத்துறை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் சர்வதேச பொறுப்பாளராகச் செயற்பட்ட குமரன் பத்மநாதன் கைது செய்யப்பட்டிருந்த போதிலும் விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் செயற்பட்டு வருவதை உறுதிப்படுத்தி இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் ஒருவர் பாதுகாப்புப் பேரவைக்குச் சமர்ப்பிக்கத் தயாரித்திருந்த அறிக்கை ஒன்றைப் பாதுகாப்புச் செயலாளர் திடீரென இடைநிறுத்தியதாகப் புலனாய்வுப் பிரிவின் உள்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (20 ஆம் பக்கம் பார்க்க)

## 11 ஆயிரம் ஏக்கரில் பண்ணைகள் அமைத்து

# 11 ஆயிரம் புலிப் போராளிகளை தடுத்து வைக்க அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் 11 ஆயிரம் விடுதலைப்புலிப் போராளிகளையும் நீண்ட கால நோக்கில் சிறைப்படுத்தும் திட்டங்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுவிக்குமாறு சர்வதேச சமூகம் குரல் கொடுத்து வரும் நிலையில் அரசினால் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அரசின் குறித்த இரக்சியத் திட்டம் தொடர்பாக வெளிவந்துள்ள தகவல்கள் வருமாறு,

500 போராளிகளுக்கு வேலை வழங்கக் கூடியதாக (20 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் தாய் மலேசியாவில்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தாயாரான பார்வதிப்பிள்ளை வேலுப்பிள்ளை தற்போது மலேசியா சென்றுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

மலேசியாவிலிருந்து பிரபாகரனின் தாயார் கனடா செல்வார் (20 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழகங்கள் மூடல்

(மட்டக்களப்பு)

கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களில் மாணவக் குழுக்களுக்கிடையே ஏற்பட்டுள்ள முறுகல்நிலை காரணமாகக் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்களில் சுமுகநிலையை ஏற்படுத்தும் வகையில் மாணவர்களை விடுதிகளிலிருந்து (20 ஆம் பக்கம் பார்க்க)







நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசியல் தலைவர்கள் சிலர் வரமறுப்பு மக்கள் நாடாளுமன்றம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நீதி, நியாயத்திற்கான மாணவர் அமைப்பால் கலைத்தூது கலையகத்தில் நேற்று நடத்தவிருந்த அரசியல் தலைமைகள் பங்கேற்கும் மக்கள் நாடாளுமன்றம் கைவிடப்பட்டது.

இது தொடர்பில் அவ் அமைப்பின் தலைவர் ரஞ்சித் தெரிவித்ததாவது,

நேற்று ஒழுங்கு செய்யப்பட்ட விவாதத்திற்கு அரசியல் தலைவர்கள் சிலர் மக்கள் முன் பிரசன்னமாகாமல் தவறியமையால் மக்கள் நாடாளுமன்றம் விவாதம் இன்றி கைவிடப்பட்டது.

இவ்விவாதத்திற்காக அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.ஆர்.எல்.எப். (பத்மநாபா) கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதரன் மற்றும் ஜனநாயக சோசலிச கட்சியினர் வருகை தந்தனர். ஏனைய கட்சிகள் வருகை தரவில்லை.

மக்களுக்கான அரசியலில் தலைவர்கள் மக்கள் முன் தோன்றி விவாதிக்க வேண்டும் என்பதையே நாங்கள் எதிர்பார்த்தோம். ஓர் அரசியல் தலைமை தனது நண்பனின் கேள்விக்கு மாத்திரமல்லாது எதிரியின் கேள்விக்கும் பதிலளிக்க வேண்டும்.

இந்நிலையில் இவர்கள் மக்களிலிருந்து தூரவிலக செயற்படுகின்றார்கள் என்பதையே நாம் விளங்கிக் கொள்கின்றோம். இவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பின் அவர்களின் நியாயத்திற்கான பதிலை எதிர்பார்க்கிறோம்.

உண்மையில் மக்களின் தலைவர்கள் சரியான அரசியல் தலைவர்கள் என்றால் மீண்டும் மக்கள் நாடாளுமன்றம் முறையான அறிவிப்பின்படி கூடும்போது அவர்களை மக்கள் முன் விவாதிக்க வருமாறு அழைக்கின்றோம்.

ஏற்கனவே திட்டமிட்ட 10 அம்சங்களை முன் வைத்து விவாதிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். நீதி, நியாயத்திற்கான மாணவர் அமைப்பின் நடுவு நிலை குறித்து கேள்வி எழுப்புகின்ற அரசியல் தலைவர்களின் கேள்விக்கு நாம் பதிலளிக்கும் வகையில் பகிரங்கமாக விவாதிப்போம். தமிழினத்தின் சுதந்திரத்திற்காக தமிழ் சமுதாயத்தின் சமத்துவத்திற்காகவும் செயல்பாடுகள் முன்னெடுக்க வேண்டும் என்ற நோக்கில் எமது அமைப்பு என்றும் பயணிக்கும். இவ்வாறு அந்த அமைப்பின் தலைவர் ரஞ்சித் தெரிவித்தார். (ந)

## யாழ்ப்பான இளைஞர், யுவதிகளுக்கு இராணுவத்தினரால் தற்காப்பு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் இளைஞர், யுவதிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தற்காப்பு கலைப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்ட பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த கத்துருசிங்கவின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இப் பயிற்சி நெறியின் முதற்கட்டப் பயிற்சி அண்மையில் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றியதாக தெரிவிக்கப்படுகின்றது.

வியாழன், ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும் இப்பயிற்சி வகுப்புக்களில் சேரவிரும்புவோர் பயிற்சி நடக்கும் இடத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் 2 ஆம் கட்டப்பயிற்சி இன்று நடைபெறவுள்ளதாகவும் பலாலி இராணுவ தலைமையகத்தினர் தெரிவித்துள்ளனர். (ந-2,6)

# கலாநிதி சோமசேகரத்தின் மறைவு மக்கள் சமூகத்திற்கு பேரிழப்பு

## பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை இரங்கல்



(யாழ்ப்பாணம்)

ஓய்வு பெற்ற நில அளவையாளர் நாயகம் கலாநிதி தாமோதரம் சோமசேகரம் நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார்.

இலங்கை நில அளவையாளர் நாயகம் என்ற அதியுயர் பதவியை வகித்து தமிழ் இனத்திற்கு பெருமை சேர்த்த இவரின் மறைவு பேரிழப்பென யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவருமான வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான சோமசேகரம் கொழும்பு பல்கலைக் கழகத்தில் கணிதத்துறையில் கற்று முதல் வகுப்பில் சித்தி அடைந்ததுடன் பட்டமேற்படிப்பை கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டவர்.

நில அளவைதிணைக்களத்தில் இணைந்து கொண்ட அவர் நில அளவையாளர் நாயகம் என்ற உயர் பதவியை வகுத்து தமிழ் இனத்திற்கு பெருமை தேடித்தந்தார்.

இலங்கையின் நஷனல் அற்லசைத் தயாரித்த பெருமை இவரையே சாரும். நில அளவை சார்ந்த பல நூல்களை எழுதிய இவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கி கௌரவித்தது.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் இருந்து பணியாற்றிய இவரின் மறைவு மக்கள் சமூகத்திற்கு பேர் இழப்பு என வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ந)

## களனி ஆற்றில் மூழ்கி மாணவர்கள் நால்வர் பலி

களனி ஆற்றில் நீராடச் சென்ற பாடசாலை மாணவர்கள் நால்வர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நேற்று மாலை கொழும்பின் புறநகர் பகுதியான ஹொரங்கம பகுதியில் நீராட சென்ற மாணவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் இருவரின் சடலம் அயலவர்களினால் மீட்கப்பட்ட போதும் இருவரின் சடலங்கள் இன்னமும் மீட்கப்பட வில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. (5)

# நீகோட் திட்டத்தில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கான உதவு தொகை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு கிழக்கு சமூதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் (NECORD) ஊடாக மீள் குடியமர்ந்த குடும்பங்களிற்கு தலா 25,000 ரூபாய்படி வழங்கப்படுகின்ற வாழ்வாதார உதவு தொகை, இதுவரை பெற்றுக்கொள்ளாத குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது ஒன்பதாவது நாளாக 15.03.2010 திங்கட்கிழமை பின்வரும் பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட குடும்பங்களுக்கு கீழ்குறிப்பிடப்படும் நேர அட்டவணையின் அடிப்படையில் அதற்கான அனுமதிக் கடிதங்கள் கையளிக்கப்படவுள்ளன.

எனவே சகல பயனாளிகளும் உரிய நேரத்திற்கு தேசிய அடையாள அட்டை/ பிறப்பு அத்தாட்சி சான்றிதழ் பத்திரத்துடன் குடும்ப பதிவு அட்டை மற்றும் வங்கி வைப்புப் புத்தகம் என்பவற்றோடு குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று தங்களது கையொப்பத்தினை இட்டு அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுள்ளார்.

மேலும் இப் பிரிவுகளில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதியில் அனுமதிக் கடிதங்களை பெறத்தவறியவர்களும் அந்தந்த இடங்களுக்குச் சென்று அனுமதிக் கடிதங்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கிராமசேவகர்பிரிவுகளும் அப் பிரிவுகளில் வசிப்போர் அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய இடங்களும்வருமாறு,

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில்; ஜே/257, ஜே/258, ஜே/261, ஜே/262காலை9மணி கோப்பாய் பிரதேச செயலாளர் அலுவலகம்.

ஜே/263, ஜே/264, ஜே/265 காலை 11 மணி ஜே/263 உரும்பிராய் மேற்கு கிராம சேவையாளர் அலுவலகம்.

ஜே/269, ஜே/270, ஜே/271, ஜே/272, ஜே/279 காலை 11 மணி நீர்வேலி தெற்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபம்.

ஜே/273, ஜே/274, ஜே/275, ஜே/276, ஜே/277 மதியம் ஒரு மணி புத்தூர் மேற்கு பொது மண்டபம்.

ஜே/278 மாலை 3 மணி புத்தூர் கிழக்கு யு.என்.எச்.சி.ஆர். கட்டிடம்.

ஜே/281, ஜே/285, ஜே/286, ஜே/287 காலை 9 மணிக்கு அச்சுவேலி லாலா சோப்கட்டிடம்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்; ஜே/129, ஜே/130, ஜே/131, ஜே/132, ஜே/133 பிற்பகல் ஒரு மணிக்கு ஜே/132 உயரப்புலம் கிராம சேவையாளர் அலுவலகத்திலும்,

ஜே/134, ஜே/135, ஜே/136, ஜே/137, ஜே/139, ஜே/140, ஜே/141, ஜே/142, ஜே/143, ஜே/141, ஜே/142, ஜே/143, ஜே/144, காலை 9 மணிமானிப்பாய் மேற்கு கிராம அலுவல கத்திலும்,

ஜே/145, ஜே/146, ஜே/147, ஜே/148, ஜே/149, ஜே/151, ஜே/152, ஜே/153, ஜே/154, ஜே/155, ஜே/156 காலை 9 மணிக்கு பண்டத்தரிப்பு பலநோக்கு சங்கத்திலும் கடிதங்களை பெற்றுக் கொள்ள முடியும். (ந-14)


கோகுல் ரவல்ஸ் Hokul Travels

திருமண வைபவங்களுக்கான குளிரூட்டப்பட்ட சொகுசு கார், வான் மற்றும் பஸ் வாடகைக்கு விடப்படும்.

Hokul Travels

தொடர்புகளுக்கு:- 021 222 8984, 077 3747825, 077 6152992

(C-4449)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

ஒருவாரகால முழுநேரகற்கைநெறிகள்.

Diploma in Computerized Accounting

உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான 100% செய்முறைப்பயிற்சியுடன்..

சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான

Quick Book + ACCPAC + MYOB

ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

Diploma in Hardware Engineering

Assembling+Upgrading+Troubleshooting+Repairing +Software Installation+Config Networking Ect..

வகுப்புகள் ஆரம்பம்:- 15.03.2010-9AM


## தவறி விட்டது

மகாரம்பைக்குளம், வவுனியா எனும் முகவரியைச் சேர்ந்த வடிவேலு கோபிநாத் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (852432020V) யாழ். பல்கலைக் கழக சுற்றுவட்டாரத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் 84, பழம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

T.P.:- 0773583598

(882)

## விற்பனைக்கு

மணல்தறை ஒழுங்கை, கந்தர் மடத்தில் 2 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:
0718799149
021 321 6742

(857)

## University of Jaffna, Sri Lanka
## General Convocation

**2010 March 26th, 27th & 28th**

Graduands those who opt to obtain their degrees in person at the above convocation are requested to obtain their cloaks at the **Academic Branch** on the following dates, producing their receipt of payment for cloaks and the Student Identity Card/National Identity Card.

| Date | Time | Degrees |
|---|---|---|
| 2010.03.16 | 09.30 a.m.-12.00 p.m. | BA(Completed in the year 2008) |
| | 02.00 p.m.-04.30 p.m. | |
| 2010.03.17 | 09.30 a.m.-12.00 p.m. | |
| | 02.00 p.m.-04.30 p.m. | |
| 2010.03.18 | 09.30 a.m.- 12.00 p.m. | BA(Completed in the year 2007,2009) |
| | 02.00 p.m.- 04.30 p.m. | |
| 2010.03.19 | 09.30 a.m.- 12.00 p.m. | BFA -Music |
| | 02.00 p.m.- 04.30 p.m. | BFA -Dance, Art&Design |
| 2010.03.20 | 09.30 a.m.- 12.00 p.m. | PhD, M Phil and Master's Degree |
| | 02.00 p.m.- 04.30 p.m. | |
| 2010.03.21 | 09.30 a.m.- 12.00 p.m. | Vavuniya Campus(Both faculties) Postgraduate Diplomas |
| | 02.00 p.m.- 04.30 p.m. | |
| 2010.03.22 | 09.30 a.m.- 12.00 p.m. | BBA |
| | 02.00 p.m.- 04.30 p.m. | B.Com , B.Sc (Agriculture) |
| 2010.03.23 | 09.30 a.m.- 12.00 p.m. | B.Sc., BSMS |
| | 02.00 p.m.- 04.30 p.m. | MBBS |

12.03.2010 Registrar

(C-4654)

## காரைநகர்- மணற்காடு

# திருவருள்மிகு தேவி கும்பநாயகி முத்துமாரியம்பாள் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலர் -2010.03.14 (ஞாயிறு)

### தேர்த்திருவிழா சிறக்க ஆதீன முதல்வரின் நல்லாசிகள்




ஈழத்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தின் திலகமென துலங்கும் காரைநகர் மணற்காடு எனும் திவ்ய திருத்தலத்திலே எழுந்தருளியிருக்கும் அம்பாள் *கும்பநாயகி ஸ்ரீ முத்து மாரி* என்ற நாமத்துடன் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாய் அருள்பாலித்து வருகின்றாள்.


அம்பாளின் மகோற்சவ பெருவிழாக்களில் ரத உற்சவம் இன்றாகும். சைவமும் தமிழும் தழைத்தோங்கி வரும் திருநகரில் வாழ்கின்ற மக்கள் அம்பாளின் திருவருள் சிறப்பினாலே நல்ல வண்ணம் வாழும் பேற்றினை பெற்றுள்ளனர்.

அகிலமெங்கும் வாழும் அனைவரும் நல்ல வண்ணம் வாழ தேரேறி அருள் பாலிக்கும் அம்பாளை பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

**'என்றும் வேண்டும் இன்ப அன்பு'**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்**
**நல்லை ஆதீன குரு முதல்வர் , நல்லை ஆதீனம்.**



### தேவஸ்தான பிரதமகுருவின் அருளாசியுரை



ஆனந்தமாய், அறிவாய், அமுதமாய், இன்பம் தருபவள் தாய். அவளே காரைநகர் மணற்காடு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரியம்மனாக எழுந்தருளி அருள் பாலிக்கின்றாள். பக்தியோடு தொழுபவர்க்கு எல்லா நலன்களையும் அருள்பவள் அவ்ளே! அவளின் திருப்பாதங்களை பூசிப்பதற்கு பரம்பரை பரம்பரையாக எனக்கும் ஒரு வரத்தை தந்திருக்கின்றாள். இத்தகு பெருமை மிகு சக்தி பேரருள் வடிவத்தில் திருத்தேரில் பவனி வந்து எல்லோருக்கும் நல்லருள் செய்கின்றாள் அவளை பணிந்து அவனியில் நலம் பெற்று வாழ்வோமாக. தேர்விழா சிறக்க எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**தேவஸ்தான பிரதமகுரு, தேவி உபாசகர்**
**சிவப்பிரம்மஸ்ரீ நா. ஞானசம்பந்த சிவாச்சாரியார்**
**மணற்காடு முத்துமாரியம்மன் தேவஸ்தானம்.**


### மகோற்சவ கால பிரதம குருவின் அருளாசியுரை



பிரபஞ்சத்தின் உற்பத்திக்குக் காரணமான மகாசக்தியாக அன்னை மூவுலகிலும் வியாபித்திருக்கின்ற அனைத்து ஜீவராசிகளும் உய்யும் பொருட்டு முப்பத்தியிரண்டு அறங்களையும் தோற்றுவித்தவள். அவ்வறங்களின் ஊடாக ஆசைக் கடலுள் அகப்பட்டு, அருளற்று அலமந்து திரிகின்ற ஆன்மாக்களுக்கு அருட்சுகம் ஈந்து ஆன்மீக உணர்வில் ஆற்றுப்படுத்தி வாழ்விப்பவள்.

அத்தகு சக்திதான் இன்று தேரேறி திருப்பவனி வந்து அருள் செய்கின்றாள். வேண்டுவார் வேண்டும் வரமெல்லாம் தந்து வாழ்விக்கின்றாள். அவளின் கருணை அளவிடற்பாலது. எல்லாம் வல்ல கும்பநாயகி முத்துமாரி அம்பாளின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க எனது நல்லாசிகளை தெரிவித்து மகிழ்வடைகின்றேன்.

**வேதாகம கிரியா கலாபூஷணம் பிரதிஷ்டாகிரியாபானு**
**ஸ்ரீ விஷ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்த சிவாச்சாரியார்.**



தேரேறி அருள் செய்ய வருக! வருக!

பங்கயத் தாள் நோவ பகலிரவாய் நின்று
பரவுவோர்க்கு நல்லருள் புரிவாய்
மங்கையர் உனை வேண்ட பொங்கிடும் பொலிவுடன்
மனையெல்லாம் சிறந்திட அருள்வாய்
சிங்கத்தின் மீதமர்ந்து தெருவலம் நீ வந்து
தீமைகள் அனைத்தையும் தொய்வாய்
எங்களின் வாழ்வினில் எழிலான தீர்வேற்ற
எழிலானகாரை மணற்காட்டில் தேரேறிவருவாய்.

*செல்வி கலாநிதி அருளானந்தன்--*

### தேரேறி வரும் கும்பநாயகி கருணை மழை பொழிந்து காவல் செய்கின்றாள்



மணற்காடு அருள்மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்து மாரியம்பாளின் தேர்த் திருவிழா பக்தி பூர்வமாக நடைபெறுகின்றது. சக்தியின்றிச் சிவமில்லை. அன்னை பராசக்தி உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்தையும் ஈன்று காத்து கருணை புரிபவள். அவளின் கருணை வடிவங்கள் பல. இப் பராசக்தியே காசியில் விசா லாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும், நாகையில் நீலாயதாட்சியாகவும், நயினையில் நாக பூசணியாகவும் வீற்றிருந்து புகழ் பரப்பி அருளாட்சி செய்கின்றாள்.அட்சி என்றால் கண். இந்த அட்சியை தன்னோடு சேர்த்துக் கொண்டவள் அன்னை.

அன்னை பராசக்தியே உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகின்றாள். அவள் ஒன்றாய் அரும்பி, பலவாய் விரிந்து இவ் உலகெங்கும் நிறைந்து நிற்கும் அன்னை. ஐயன் அளந்த படி இரு நாழி கொண்டு அகிலமெல்லாம் உய்ய அறம் வளர்த்த பெருமை உடையவள். ***ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலாருக்கு ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளோணம் கொட்டாவோ*** என்ற மணிவாசகரின் மணிவாக்கின் படி அன்னை பராசக்தி பல்வேறு வடிவங்களையும் நாமங்களையும் பெற்றவளாக பாடிப் பரவசப்படுகிறாள். இத்தகைய பெருமைகளையுடைய தாய் காரைநகர் மணற்காட்டில் திருவருள்மிகு தேவி கும்பநாயகி முத்துமாரி என்ற நாமத்தோடு பல நூறு ஆண்டுகளுக்கு முன் எழுந்தருளி அருளாட்சி செய்கின்றாள். எவர் என்னவரம் கேட்டாலும் இல்லையென்னாது அருளும் அம்பிகை அவள். அப்பெரும் சக்தி இன்று அழகிய இத் திருத் தேரில் ஆரோகணித்து வருகின்ற காட்சி தேவலோக இந்திர விழாப் போல் அமைந்து விடுகின்றது.

தேரோட்டம் மனித வாழ்க்கைக்கு ஒப்பானது. தேரினுடைய வடிவத்தை சிந்திக்கின்ற பொழுது சுவாலித்து எரியும் அக்கினியின் வடிவமாக காட்சியளிக்கின்றது. அக்கினி அழித்தல் தொழிலை செய்கின்றது. அத் தத்துவத்தை உணர்த்துவதே தேர்த்திருவிழாவாகும். இந்தவகையில் அம் பிகை ஆன்மாக்களின் மலங்களை போக்கி தீமைகளை அழித்து நல்லருட்பேற்றினை அருள தேரேறி வருகின்றாள். அவளின் திருவருளை வியந்து அவள்தாள் பணிவோமாக. எல்லோருக்கும் அன்னை கும்பநாயகி நல்லருள் புரிய பிரார்த்திப்போமாக.

**வர்ணனைக் கலாநிதி மதுரகவி**
**காரை.எம்.பி. அருளானந்தன்,**
**ஆசிரியர் ஸ்ரான்லிக் கல்லூரி .**

### அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்

காரைநகர் மக்களின் கண் கண்ட தெய்வமாக
வேண்டுவார் வேண்டும் வரமெலாம் தரும் மாரியாக,
வேப்பிலைக்காரியாக திருவருள் உரு ஏறி வாக்கு சொல்லி
வாழ்விக்கும் தாயாக கற்பூர தீப ஜோதியில் கருணை
வடிவம் தாங்கி எம்மை எல்லாம் ஆளும் எழில் மிகு
மணற்காடு குடும்பநாயகி முத்துமாரியம்மாளின் தேர்த் திருவிழாவில்
எல்லா நலன்களையும் எல்லோருக்கும் அம்மாள் தர பிரார்த்திக்கின்றோம்.

*அம்பிகை அடியவர்கள்*

*மலரமைப்பு -மதுரகவி*


தேர்விழா சிறத்திடவும் எல்லோருக்கும் நல்லருள் கிடைக்க பிரார்த்திக்கும் வர்த்தக முதல்வர்கள்

**ரூபா பன்முக வர்த்தகம்**
104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**யாழ்.காலணியகம்**
YARL TRADES CENTRE
Agents for : *Bata*
11, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 2223152

**ராஜா பான்சி**
153, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2847

**லக்ஷ்மி ரேடர்ஸ்**

316, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 8628

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**
இல. 105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021-2226953

'பசுவதை ஒழிப்போம்'
**தேனு களஞ்சியம்**

இல.29, நவீன சந்தை
உட்புறம், திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**மலர் டெக்ஸ்டைல்ஸ்**
இல.18 பெரியகடை (67A),
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 2222791

**கிருஷ்ணா நகை மாளிகை**

இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 2225046.
**கிருஷ்ணா அடைவுகடை**
இல.370, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

TCN EXPRESS INTERNATIONAL
**உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை**
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)
குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா வீதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ப.நோ.கூ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்
**TCN EXPRESS**
2B, Nelsan Place, Colombo -06

# விளையாட்டு மைதானம் இன்மையால் தேசிய போட்டிகளில் மிளிர முடியாதுள்ளது

## தென்மராட்சி பெற்றோர் கவலை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பாடசாலைகள் சிலவற்றில் விளையாட்டு மைதானம் இன்மையால் தேசிய மட்டப் போட்டிகளில் தமது பிள்ளைகள் மிளிர முடியாதுள்ளதாக பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி உரிய மைதானமில்லாத பாடசாலைகள், வயல் வெளிகள், ஆலய முன்றல், தனியார் காணிகளில் பெரும் சிரமத்தின் மத்தியில் தமது இல்ல மெய்வல்லுனர் போட்டிகளை நடத்துகின்றனர்.

தொடராக பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு மைதான வசதி இல்லாததில் வலய மட்ட கோட்ட மட்ட போட்டிகளில் தமது திறமையை வெளிக்கொணர முடியாதுள்ளதாகவும் அதன் மூலம் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புகளை இழந்துவிடுவதாகவும் மேலும் தெரிவித்தனர். (2-29)

# சட்டத்திற்கு புறம்பானவகையில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை அகற்றக் காலக்கெடு

## தேர்தல் ஆணையாளர் அறிவுறுத்தல்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் நாடளாவிய ரீதியில் ஒட்டப்பட்டிருக்கின்ற சட்டவிரோதமான சுவரொட்டிகளை நாளை திங்கட்கிழமைக்கு முன்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

கட்சி செயலாளர் மற்றும் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் இந்த ஆலோசனையை பொலிஸ்மா அதிபருக்கு வழங்கியுள்ளார்.

தேர்தல்கள் செயலகத்தில் நடை பெற்ற இந்தச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும் எம்.பி.யுமான திஸ்ஸ அத்தநாயக்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, ஜனநாயக தேசிய கூட்டணியின் சார்பில் பாராளுமன்ற உறுப் பினர் அனுரகுமார திஸாநாயக்க மற்றும் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கு பற்றினர்.

இதில் சட்டவிரோதமான சுவரொட்டிகளை திங்கட்கிழமைக்கு முன்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களில் வேட்பாளர்களின் புகைப்படங்கள் தாங்கிய ஸ்டிகர்கள் ஒட்டப்பட்டிருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (2-6)




கச்சேரி நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சிஅம்மன் ஆலய

வருடாந்த மஹோற்ஸவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் சுபமங்களகரமான விரோதி வருடம் பங்குனித்திங்கள் 03 ஆம் நாள் (17.03.2010) புதன்கிழமை முதல் பங்குனித் திங்கள் 17 ஆம் நாள் (31.03.2010) புதன்கிழமை வரையான (15)பதினைந்து தினங்கள் மஹோற்ஸவ விழாவும் தொடர்ந்து பூங்காவனம், வைரவர்சாந்தி, அன்னதானம் என்பனவும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. தினமும் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து அம்பிகையை வணங்கி அருளைப் பெறுவீர்களாக.

கிரியாகால விபரம்

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 17.03.2010 | புதன் | காலை 10.00 மணி |
| தினசரி உற்ஸவம் | | | காலை 7.30 மணிக்கு அபிஷேக ஆரம்பம்<br>காலை 9.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை<br>மாலை 5.00 மணிக்கு |
| வேணுகோபாலர் உற்ஸவம் | 28.03.2010 | ஞாயிறு | காலை 6.00 மணி |
| சப்பறம் | 29.03.2010 | திங்கள் | காலை 9.30 மணிக்கு கற்பூரச்சட்டி வழிபாடு<br>மாலை 4.30 மணிக்கு திருவிளக்குப் பூசை<br>சப்பறத்திருவிழா |
| தேர் உற்ஸவம் | 30.03.2010 | செவ்வாய் | காலை 7.00 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை<br>காலை 8.00 மணிக்கு தேரில் ஆரோகணித்தல்<br>காலை 10.00 மணிக்கு தேரால் அவரோகணித்தல்<br>தொடர்ந்து நவசக்தி அர்ச்சனையும் பிராயச்சித்த அபிஷேகமும் |
| தீர்த்தோற்ஸவம் | 31.03.2010 | புதன் | காலை7.00 மணிக்கு வசந்த மண்டபப்பூஜை<br>தொடர்ந்து தீர்த்தோற்ஸவம்<br>மாலை 5.00 மணிக்கு கொடியிறக்கம்<br>சண்டேஸ்வரி உற்ஸவம் தொடர்ந்து ஆச்சாரிய சம்பாவனை |
| பிராயச்சித்த அபிஷேகம் | 01.04.2010 | வியாழன் | காலை 10.00 மணி |
| பூங்காவனம் | 01.04.2010 | வியாழன் | மாலை 4.30 மணிக்கு அபிஷேகமும் பூஜையும் தொடர்ந்து திருவூஞ்சலும் திருவுலாவும் நடைபெறும். |
| வைரவர் உற்ஸவம் | 02.04.2010 | வெள்ளி | மாலை 5.00 மணிக்கு வைரவர் உற்ஸவம் |
| அன்னதானம் | 03.04.2010. | சனி | நண்பகல் 12.00 மணிக்கு |

ஆலய பரிபாலனசபை

கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(C/4653)


# நான்கு கிராமங்களுக்கான மின்விநியோகத் திட்டம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்



ஊறணி, வீரவாணி, பெரியபொக்கனை மற்றும் வாதரவத்தை ஆகிய நான்கு கிராமங்களுக்கும், தோட்டங்களுக்குமான மின் விநியோகத் திட்டங்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்துவைத்தார்.

இதன் பிரகாரம் மேற்படி கிராம மக்கள் முகங்கொடுத்து வந்திருந்த மின்சாரப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டுள்ளது.

மேற்படி விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து கருத்துத் தெரிவித்த அமைச்சர், பல வருட காலமாக இப்பகுதி மக்கள் மின்சார வசதி இன்றி பெரும் சிரமங்களை எதிர் நோக்கி இருந்ததாகவும் இப்பகுதி மக்களின் தேவைகள் குறித்து ஆராய்ந்த போது மின்சார பிரச்சினை மிக முக்கிய பிரச்சினையாக இருந்ததாகவும் எனவே அப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பிரகாரம் மேற்படி நான்கு கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கும் மின்சார வசதிகள் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் மேற்படி திட்டத்திற்கு உதவிய நிறுவனங்களுக்கும், மின்சார சபை ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மற்றும் மேற்படி பணியில் பங்கு பற்றிய அனைவருக்கும் அமைச்சர் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். (2-6)

# இயல்பு நிலைக்கு திரும்பும் பளை

(வடமராட்சி)

பளைப் பகுதியில் மீண்டும் ஓரளவு இயல்பு நிலை ஏற்பட்டுள்ளது. அப்பகுதியில் குறித்த மக்கள் மீளக்குடியமர்ந்ததன் பின்னர் மக்கள் நடமாட்டம் காணப்படுகிறது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் கடந்த சில வாரங்களிற்கு முன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகமும் செயற்பட்டு வருகிறது. பளை நகரப் பகுதியில் சிறு சிறு கடைகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

மற்றும் அரச செயலகங்களும் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. விரைவில் பொதுச் சந்தை இயங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-10)

# கட்சி சார்பாக பொலிஸார் செயற்பட்டால் கடும் நடவடிக்கை -பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் போது கட்சி சார்பாகச் செயற்படும் அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

சமூகப் பொறுப்புடைய பொலிஸ் சேவையில் கட்சிகளுக்கோ அரசியல்வாதிகளுக்கோ பொலிஸார் உதவக்கூடாது என அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பாக சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பக்கச்சார்பாக செயற்பட்ட பொலிஸ் அதிகாரி களில் சிலர் கட்டாய விடுமுறைகளில் செல்லப் பணிக்கப்பட்டதுடன் இடமாற்றங்களும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய இலங்கையருக்கான மீள் பதிவு

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணியாற்றி மீண்டும் நாடு திரும்பியுள்ள இலங்கையர்களின் மீள் பதிவு செயற்திட்டத்தை எதிர்வரும் நாட்களில் பிரதேச செயலாளர் மற்றும் கிராமசேவகர் பிரிவுகளினூடாக மேற்கொள்ளவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

தற்சமயம் இந்த நடவடிக்கைகள் பிரதேச காரியாலயங்களூடாக மேற்கொள்ளப்படுவதன் காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுக்கவேண்டி ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாகவே இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (4)

# "பாமாலை சூடும் அம்பிகை" இசைத்தட்டு வெளியிடப்படவுள்ளது

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ள வருடாந்தப் பொங்கல் விழாவை முன்னிட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை " பாமாலை சூடும் அம்பிகை" என்ற இசைத்தட்டு வெளியிடப் படவுள்ளது.

இவ் இசைத்தட்டில் இடம்பெறும் பாடல்களை துரை கணேசமூர்த்தி இயற்ற சப்தமி கலைக்கூட இசைவல்லுநர் சத்தியன் இசைஅமைத்துள்ளார்.

பாடல்களை யாழ்.பல்கலைக்கழக இசைத் துறைத்தலைவர் நா.வி.மு.நவரத்தினம், விரிவுரையாளர் த.றொபேட், விரிவுரையாளர் குமாரசாமி, விரிவுரையாளர் செல்வி ந. சொரூபி மற்றும் மேரியோசப், நுசந்தா ஆகியோர் பாடியிருக்கிறார்கள். (2-6)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்




### உன்னால் முடியும்...

முட்டாள் நானென்று
முடங்கிக் கிடக்காதே!
முதுகை முதலில் நிமிர்த்து - உன்
முன்னால் தெரியும் இலக்கு!
முட்கள் இருக்கும் பாதையில்...
முட்டுக்கட்டைகள் தடுக்கும்
கால்களில்...
முயன்று நீயும் பாரு!
"முட்டாள்" என்ற அகராதி உன்னால்
முடங்கிப்போகும் ஓர்நாளில்!

என்.சுதா
கொக்குவில்

### அந்த இரவுகள்

அந்த இரவுகளுக்கும் இனி
சாட்சிகளில்லை
அந்தரங்கமே அந்தரித்துப் போனதால்...

வேட்டுக்களும்
வேதனைத் தழும்புகளும்
வேஷங்கள் இல்லாமலே
கழுவேற்றப்பட்டன

அழுகுரல்கள்
அபயங்களை அணைத்துக்கொள்ள
அர்த்த ராத்திரிகளும்
விழித்துக்கொண்டது
விடியாமலே விடிந்துகொண்டது
இரவின் நகர்வுகளும்

கலக்கம் கலைந்துபோக
உறக்கம் கணங்களின்
வாயிலில்
கால் பதித்துக்கொண்டது
ஒரு இரவின் விடியலுக்காக

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

### விடைகூறு பெண்ணே

அழகாய் இருக்கிறது புரியவில்லை
நீ என்ன ஈராக்கிய யுத்தமா?
தீபமாய் எங்கும் ஒளிருகின்றாய்
நீ என்ன ஒலிம்பிக் ஜோதியா?
அழகாய் இருக்கிறாய் நீ
பயமாய் இருக்கிறேன் நான்
நீ என்ன அழகிய ராட்சசியா?
உன்னிடம் மட்டும் உண்டு
அழகிய விழி மீன்கள்
நீ என்ன மீனினம் வாழும்
சமுத்திரமா?
விடைகூறு பெண்ணே!
நீ என்ன விடைதெரியாப் புதிரா?

என்.நவீனா
கொக்குவில்

### நினைவுச் சின்னம்

பெண்ணே நீ
காயம் நூறு தந்தாலும் – நான்
உன்னை மறக்கப் போவதில்லை
ஏன் தெரியுமா? நீ
தரும் காயங்கள் ஒவ்வொன்றும்
நினைவுச் சின்னமாக என்
இதயத்தில் அல்லவா இருக்கிறது

சி.நிர்மலா
தொண்டைமானாறு

### ஏப்ரல் எட்டு மட்டும்

தேக்கு மர நிழலில்
வாக்காளர் பெருமக்கள்
ஏக்கம் உடன் நின்றார்
எம்.பி.யின் வரவுக்காக
கூலரில் வந்தவரை வரவேற்றோம்
வாழ்த்தி நின்றோம்.
கும்பிட்டார் குலைந்தணைத்தார்
எம் நிலை கண்டு புண்ணியவான்
கண்ணீரே சிந்திவிட்டார்
எப்பொழுதும் நீவிர்
என் பின்னால் அணி திரள்வீர்
உள்ளத்தில் உறைந்தோரே
உடன் பிறந்தோரே
என்னை மறந்திடாதீர்
என் சின்னம் துறந்திடாதீர்
ஏங்கிட வேண்டாம்
எத்தனையோ திட்டங்கள்
என் நெஞ்சினிலே
பதித்து விட்டேன்
பொன்னான வாய்திறந்து
எல்லாமே சொல்லிவிட்டார்
சொல்வதற்கு மறந்தாரோ
மறைத்தாரோ
ஏப்ரல் 8 மட்டும் எங்களுடன்
இருப்பேன் என்று

நடராசா சந்திரலிங்கம்
அச்சுவேலி வடக்கு.

## மௌனத்தின் தேடல் – 10



### விவரமான குழந்தாய் நீ

விவரமான குழந்தாய் நீ
ஆணும் பெண்ணும் சரிநிகராய்
அலுவலகம் செல்லும் அவசரமான
உலகமதில் தாய், தந்தை அன்பிற்கு
சரியான உறவுப்பாலம் என
கண்டுகொண்டாய் போலும்

த.சக்திவேல்
பருத்தித்துறை

### விபரீதம்

இதன் தொல்லை தெரியாத பிஞ்சு
தாயின் அன்பு உள்ளம்
எனநினைத்து
அணைத்து வாயில் வைக்கிறது
இதன் அபத்தம் புரிந்ததும்
தூக்கி எறிந்துவிடும்

பா.சிவாஜினி
கெருடாவில்

### கதைசொல்லும் சின்னஞ்சிறுசு..

கைத்தொலைபேசியை
கையில் வைத்து
கதைசொல்லும் சின்னஞ்சிறுசு
நாளை உலகு எம் கையில்
தான் என்பதை
சொல்லாமல் சொல்லுதோ - இல்லை
கைத்தொலைபேசிதான்...
எம் இளையோரை
சிதைத்துவிட்டதென
மெல்ல சொல்லி சிரிக்குதோ

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

### யாருக்கு மழலைமொழி

அன்பின் பொக்கிசமே;
மழலையின் பிறப்பிடமே;
புன்னகை மாறாமல்
தொலைபேசி வழியே
யாருக்கு மழலைமொழி?

ந.பிரதீபன்
கல்வயல்

### வேண்டாம் உன் கைகளில்

சிந்திக்கத் தெரியாத
சிறுபிள்ளை என்பதால்
செல்போனை வைத்து
சிரித்து மகிழ்வது – என்னை
சிலிர்க்க வைத்தாலும்
சிந்திக்கத் தெரிந்தவர்கள்
செல்போனைவைத்து
போடுகிற நாடகத்தால்
உன் சின்னக் கைகளிலே
வேண்டாம்இந்தச்
சீர்கெட்ட செல்போன்

கி.சரண்யா
தாவடி

### தொ(ல்)லை பேசி

கதை கேளு கதை கேளு
கண்மணியே கதைகேளு
தொலைபேசிகள் இன்று
தொல்லைகள் பேசுவதால்
உன் உறவோடு உறவாடும்
உன் தொலைபேசியும்
நாளை உன்னோடு
தொல்லைகள் பேசும்

இணுவை சுகந்தி

### தொலைபேசி பாவனை

தொல்லைகள் தருவதால்
பலபேர் சொல்லியும்
தொலைந்துவிடாமல்
தொலைபேசி பாவனை
குழந்தையின் காதருகே!
தொலைபேசி இன்றெனில்
இவன் வளரிளம் உலகம்
எப்படி இருக்கும்

மருதங்கேணியூரான்

### ஹலோ

அம்மா அப்பா என்று
மழலை பேசும் வயதில்
ஹலோ ஹலோ சொல்கிறது
இந்த பிஞ்சு உள்ளம்
யாரறிவார் ஹலோ என்பவள்
கிரகாம் பெல்லின் காதலி என்று...!

வல்வையூர்
நிலாரசிகன்

தொலைபேசி இன்று
தொல்லை பேசியாக
மாறி உன்
தூக்கத்தையும்
கெடுத்துவிட்டதா?

கே.தர்சினி
மானிப்பாய்

### தொலைபேசி

வெளிநாட்டில்
இருப்பது
உன் தந்தையா?
தாயா?
குழந்தாய்!
தொல்லை பேசியில்
பேசுவதால்
கேட்டேன்

அ.மயூரன்
கல்வயல்

### தொலைபேசியுடன்

சுற்றும் உலகில்
தொடரும் உன் பயணம்
தொடர்புகளை ஏற்படுத்தி
மழலை மொழிபேசும் உன்
உள்ளத்தில்
உலகம் இனி உன்
கரத்திற்குள்...

நவரத்தினம்.சதீஸ்
கந்தர்மடம்

பாரையே பாழ்படுத்தும்
தொலைபேசி
பாலகனையும் விட்டு
வைக்கவில்லை

என்.சசிகலா
கிளாலி

### வேண்டாம் விபரீதம்

செல்போன்களால் சீரழிகின்றது
பருவ இளசுகளின்
வாழ்க்கை
மழலை உனக்கும்
ஏன் இந்த செல்போன்
அதையே எறிந்துவிடு
வேண்டாம் விபரீதம்

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

### புரியாத புதிர்

குழந்தை பராயத்திலே!
மழலைமொழி பேசிட
தொலைபேசி வந்துவிட்டது
இளைஞனாகும்போது
என்ன சாதனம் இவன் கையில்
இருக்குமோ புரியவில்லை

வே.அகிலேஸ்வரன்
மருதங்கேணி

## சங்குநாதம்

## மௌனத்தின் தேடல்- 11



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல.3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 19.03.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை விளக்கம்



இரா. சம்பந்தன்

### இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய இனம்

பதினாறாம் நூற்றாண்டில் மேற்கத்தேய வல்லரசுகளின் வருகைக்கு முன்னதாக இலங்கைத் தீவிலே மூன்று ராஜதானிகள் இருந்தன. அவற்றில் ஒன்று வடக்கிலே தமிழருக்கு சொந்தமாக இருந்தது. மத்திய மலையகத்திலே இருந்த கண்டி இராச்சியம் தான் கடைசியானதாக 1815 இல் பிரித்தானியரிடம் வீழ்ச்சியடைந்தது.

1833 ஆம் ஆண்டு நிர்வாக வசதிக்காக இந்த மூன்று இராஜதானிகளையும் பிரித்தானியர் ஒன்றிணைத்தனர். அன்றிலிருந்து இலங்கை ஒரே நிலப்பரப்பாக ஆளப்பட்டது. 1948 ஆம் ஆண்டு ˜காலனித்துவ | ஆளுகையில் இருந்து சுதந்திரம் பெற்ற வேளையில் சாதாரண பெரும்பான்மைத்துவம் கொண்ட ஒற்றையாட்சித் தன்மையான அரசியல் அமைப்பு ஒன்று இலங்கைக்கு வழங்கப்பட்டது.

இந்த அரசியலமைப்பின் 29 (2) உறுப்புரையில் குறித்ததொரு சமூகத்தையோ > சமயத்தையோ பாவிக்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற சட்டமோ அல்லது குறித்த ஒரு சமூகத்திற்கோ > சமயத்திற்கோ மற்றவர்களுக்கு இல்லாத சலுகையைக் கொடுக்கும் சட்டத்தையோ நிறைவேற்றக்கூடாதென்ற தடை விதிக்கப்பட்டது.

### சமஷ்டி அரசியல் அமைப்பிற்கான கோரிக்கை

1949 ஆம் ஆண்டில் இந்திய வம்சாவழி தமிழர்களில் கணிசமானோருடைய குடியுரிமை பறிக்கப்பட்டதுடன் சிங்களம் மாத்திரம் அரச கரும மொழியாக மாற்றப்பட்டது. 29 (2) உறுப்புரை இப்படியானவற்றை தடுப்பதற்காக இயற்றப்பட்டிருந்தும் கூட இந்தச் சட்ட மூலங்கள் நிறைவேற்றப்பட்டன. இது அதுவரை காலமும் இருந்த அரசாங்கக் கொள்கைக்கு மாறான செயலுமாகும். இந்தக் கால கட்டத்தில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வட > கிழக்குப் பிரதேசங்களில் அந்தப் பிரதேசங்களில் குடிசன பரம்பலை மாற்றியமைக்கும் விதத்தில் அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்கள் முழு மூச்சோடு நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்தப் பின்னணியில் இலங்கை தமிழ் மக்கள் சிங்களவரிடம் இருந்து பிறிதொரு தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை 1951 ஏப்ரல் மாதத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி எடுத்தியம்பியது. இந்த சுயநிர்ணய உரிமையின் வெளிப்பாடாக தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு > கிழக்கில் ஒரு சமஷ்டி முறையான ஆட்சியை தமிழரசுக் கட்சி வலியுறுத்தியது.

ஆரம்பத்தில் வெளிநாட்டுப் படையெடுப்புக்களினாலும் பின்னர் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளாத பெரும்பான்மையினரின் மேலாதிக்க வாதத்தை உறுதி செய்யும் அரச முறை ஒன்றின் மூலம் தமிழ் மக்கள் இழந்து விட்ட சுயநிர்ணய உரிமையை திரும்பவும் வென்றெடுப்பதற்கான 1950 களில் இருந்து 1960 களின் இறுதி வரை தமிழரசுக்கட்சி பல அமைதி வழிப் போராட்டங்களை நடத்தியது.

### பண்டா - செல்வா ஒப்பந்தம்

அரச கரும மொழிச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் இலங்கையின் பிரதமராக இருந்த எஸ்.டபிள்யூ பண்டாரநாயக்கவிற்கும் தமிழ் மக்களின் தலைவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கும் இடையில் 1957 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. அரச காணிகளுக்கு மேலான தனி அதிகாரத்தையும் மற்ற அரச அதிகாரங்களையும் பிரதேச சபைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு இந்த ஒப்பந்தம் வழிசெய்தது. ஆனால் பெரும்பான்மை சமூகத்தினர் இதனை எதிர்க்கிறார்கள் என்று காரணம் காட்டி பண்டாரநாயக்கா இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்தவில்லை.

### டட்லி - செல்வா ஒப்பந்தம்

பின்னர் 1960 ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கின் குடிசனப் பரம்பலை மாற்றியமைப்பதை தடைசெய்யும் வகையில் அரச காணி பகிர்ந்தளிப்பதற்கான கொள்கைகளை உள்ளடக்கி சுயாட்சியை ஏற்படுத்துகின்ற ஒப்பந்தம் ஒன்று தமிழ்த் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கும் பிரதமர்




டட்லி சேனநாயக்கவிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையில் 1965 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி அமைச்சரவையில் இணைந்து கொண்டது. ஆனால் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற காரணத்தாலும் சுயாட்சியை ஏற்படுத்த அரசு முயற்சிக்கவில்லை என்ற காரணத்தாலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அமைச்சரவையில் இருந்து விலகிக் கொண்டது.

### அரச குடியேற்றங்கள்

வடக்கு கிழக்கை தங்களுக்கு பாரம்பரிய தாயகமாகவும் அதிலே தமது சுயநிர்ணய உரிமையை உடையதாகவும் கருதுகின்ற எமது மக்கள் இலங்கை சுதந்திரம் அடைந்த பின் வடக்கு கிழக்கின் குடிசனப் பரம்பலை பாதிக்கும் வகையிலான அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் பெரிதும் பாதிப்படைந்தனர்.

1940 களுக்கும் 1980 களுக்கும் இடைப்பட்ட காலத்தில் அரசாங்கத்தினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களினால் அரச காணி பகிர்ந்தளிக்கின்ற கொள்கையினாலும் குடிசனப் பரம்பல் வீதம் பாரியளவில் மாற்றம் அடைந்தது. இலங்கை சுதந்திரம் அடைந்த பொழுது கிழக்கு மாகாணத்தில் 9% ஆக இருந்த சிங்கள மக்களின் சனத்தொகை 1981 ஆம் ஆண்டு கடைசியாக நடைபெற்ற குடிசன மதிப்பீட்டின் படி 25% வீதமாக உயர்ந்திருந்தது.

அதேச சமயம் 1947ற்கும் 1981ற்கும் இடைப்பட்ட காலத்தில் நாடளாவிய ரீதியில் சிங்கள மக்களின் சனத்தொகை 238% ஆக உயர்ந்த வேளையில் கிழக்கு மாகாணத்தில் மட்டும் சிங்கள மக்களின் சனத் தொகை 883% ஆக அதிகரித்தது. வடக்கு கிழக்கின் குடிசனப் பரம்பலை இவ்விதமாக மாற்றும் அரசின் நிகழ்ச்சி நிரல் முழுத்தீவிரமாக இன்று வரை நடைபெற்று வருகின்றது.

கடந்த 60 ஆண்டு காலமாக வடக்கு கிழக்கில் புதிதாகக் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கான நீர்ப்பாசன திட்டங்கள் தவிர வேறு எந்தவிதமான முக்கியமான அபிவிருத்தித் திட்டங்களும் எந்த ஒரு அரசாங்கத்தினாலும் முன்னெடுக்கப்படவில்லை. இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான காலப் பகுதியில் எமது மக்களும் எமது நிலமும் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டன.

### குடியரசு அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழ் மக்கள் பங்குபற்றாமை

1970 ஆம் ஆண்டு இலங்கைக்கு இலங்கை மக்களே உருவாக்குகின்ற அரசியலமைப்பொன்றை ஏற்படுத்துவதற்காக அரசியல் யாப்பு நிர்ணயசபை ஒன்று கூட்டப்பட்டது. இதிலே தமிழரசுக்கட்சியும் ஆரம்பத்தில் பங்குபற்றி சமஷ்டி ஆட்சி அடிப்படையிலான சில கொள்கைகளை ஏற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தியது. ஆனால் அந்த பிரேரணைகள் யாவும் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்ட போது தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் அந்த அரசியல் யாப்பு நிர்ணய சபையிலிருந்து வெளியேறினர்.

அதைப் போலவே 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பு உருவாகத்திற்கும் தமிழ் மக்கள் தமது ஒப்புதலை வழங்கவில்லை. முதலாம் > இரண்டாம் குடியரசு அரசியல் யாப்புக்கள் இரண்டும் ஒற்றையாட்சி முறையை உறுதிப்படுத்தி சிங்கள மொழிக்கு மட்டும் அரச கருமமொழி என்ற அந்தஸ்தையும் பௌத்த மதத்திற்கே முதலிடம் என்ற அந்தஸ்தையும் கொடுத்தன. சோல்பரி அரசியல் யாப்பில் 29 (2) இல் சிறுபான்மை மதங்களுக்கும் மக்களுக்கும் எதிராக சட்டம் இயற்றக்கூடாது என்ற தடையையும் இந்த அரசியல் யாப்பு நீக்கியது. ஆகவே 1972 ஆம் > 1978 ஆம் அரசியல் யாப்புகள் தமிழ் மக்களின் ஒப்புதலின்றி உருவாக்கப்பட்டதாகும்.

### தரப்படுத்தல்

பல்கலைக்கழக அனுமதிகளைத் தரப்படுத்தும் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகத்தினுள் உட்செல்ல முடியாமலும் அவர்களை விட குறைந்த புள்ளிகளைப் பெற்ற சிங்கள மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெறவும் வழிவகுக்கப்பட்டது. இது தமிழ் மாணவர்கள் உயர் கல்வி பெறுவதை தடுத்து அவர்களுடைய விரக்தியை அதிகரித்தது.

1970 ஆம் ஆண்டுகளில் இதற்கெதிராக அமைதிப் போராட்டங்களில் ஈடுபட்ட 40 இற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் நீதிமன்ற விசாரணையின்றி சில வருட காலமாக தடுத்து வைக்கப்பட்டனர்.

### தமிழ் மக்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள்

தமிழ் மக்களுக்கெதிராக இழைக்கப்பட்ட பாரபட்ச நடவடிக்கைகளுக்கும் மற்ற அநீதிகளுக்கும் மேலாக 1956 > 1958 > 1961 > 1977 > 1981 > 1983 ஆம் ஆண்டுகளில் நாடு முழுவதும் தமிழ் மக்களுக்கெதிராக வன்முறைகள் திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்டன. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அரசாங்கத்தினால் எந்த விதமான பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. இந்த சந்தர்ப்பங்களில் நாட்டின் மற்றப் பாகங்களில் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களை அரசாங்கம் கப்பல்களில் ஏற்றி வடக்குக் கிழக்குக்கு அனுப்பியதன் மூலம் இந்த இரு மாகாணங்களும் எமது பாரம்பரிய தாயகம் என்பதை அரசாங்கமே ஏற்றுக் கொண்டுள்ளது.

அரசாங்கத்தின் மேற்கண்ட நடவடிக்கையின் விளைவாக அரச பயங்கரவாதத்திற்கெதிராகவும் தமிழ் மக்கள் இழந்து விட்ட இறையாண்மையை மீண்டும் வென்றெடுப்பதற்காகவும் தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களைக் கையிலெடுத்தனர்.

### இழந்துபோன இறையாண்மையை மீட்டெடுப்பதற்கான அழைப்பு

இலங்கைத் தமிழரசுக்கட்சியும் ஏனைய தமிழ் கட்சிகளும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற பெயரில் ஒன்று சேர்ந்து 1976 ஆம் ஆண்டிலே இழந்த எமது இறையாண்மையை மீளப் பெறவேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினர். இது 1956 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் மக்கள் கொடுத்த ஜனநாயக ஆணையை அரசு புறக்கணித்ததாலும் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை தொடர்ச்சியாக மறுத்து வந்தமையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும

சிங்கள அரசாங்கங்களுக்கும் தமிழ தலைவர்களுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் கூட மதிக்கப்படவில்லை. தமிழ் மக்களுக்கெதிரான அடக்குமுறையும் பாரபட்சமும் எந்தவிதமான கட்டுப்பாடின்றி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வந்தது. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 1977 யூலை மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இழந்து போன இறையாண்மையை மீளப்பெறுவதற்கான ஆணையை தமிழ் மக்களிடம் கோரியிருந்தது. அந்த தேர்தலிலே வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் ஒன்றைத் தவிர மற்ற எல்லாத் தொகுதிகளிலும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி வெற்றியீட்டியது.

### அதிகாரத்தை பகிர்வதற்கான ஒழுங்குமுறைகள்

1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைக்குப் பின்னர் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென்று தமிழ் பேசும் மக்களுக்கு கூடிய சுயாட்சி வழங்குகின்றதோர் மாற்று அரசியல் திட்டத்தினூடாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல முயற்சிகள் செய்யப்பட்டன. 1987 ஆம் ஆண்டு ஏற்படுத்திய இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரதிபலனாக வடக்குக் கிழக்கை ஒரு மாகாணமாக ஒன்றிணைத்து ஒரு அரசியல் நிர்வாக அலகு தோற்றுவிக்கப்பட்டது.



மாவை சேனாதிராஜா

மிகக் குறைந்தளவிலான அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபைகள் உருவாக்கப்படுவதற்கு இந்த மாற்றங்கள் வழிவகுத்தன. ஆனால் இந்த நாடு ஒற்றையாட்சி முறையின் கீழே தொடர்ந்தும் இருந்தது. அத்தோடு அதிகாரங்களைப் பகிரவந்த 13 ஆவது திருத்தச்சட்டம் மத்திக்கான அதிகாரங்களை மீளப் பெற்றுக்கொள்ள பயன்படுத்தப்பட்டது. அர்த்தமுள்ள விதத்தில் அதிகாரத்தைப் பகிர்வதற்கு இது எந்த விதத்திலும் ஏற்புடையதல்ல.

### ஒற்றையாட்சிமுறையை இல்லாதொழித்தல் பகிர்ந்தனுபவிக்கும் இறைமை

1899 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இலங்கை அரசாங்கம் அரசியல் சாசனத் திருத்தத்திற்காக ஒரு தொகுதி பிரேரணைகளை அறிவித்தது. இலங்கை ஒரு பல மொழி பல மதங்களைக் கொண்ட பன்மத்துவ சமூகம் என்ற அடிப்படையில் ஐக்கியப்பட்ட நாட்டிற்குள் ஒரு அரசியல் வரைவை பிரிக்கப்படமுடியாத பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற அடிப்படையில் 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை அரசாங்கம் வெளியிட்டது.

2000 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட மூலத்தின் பிரகாரம் ஒற்றையாட்சி முறை என்பது அகற்றப்பட்டு அரசியல் அதிகாரங்களைப் பொறுத்தவரையில் பகிரப்பட்ட இறையாண்மை என்ற அடிப்படை முன்வைக்கப்பட்டது. (தொடரும்)

## முறைப்பாடு தீர்த்து வைப்பு

(சாவகச்சேரி)

கடந்த வாரம் கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி மத்தியஸ்த சபைக்கு கையளிக்கப்பட்ட இரு சாராருக்கிடையிலான பிணக்கு சுமூகமான நிலையில் தீர்த்து வைக்கப்பட்டது.

ஒருவரை தாக்கியதாக செய்யப்பட்ட முறைப்பாட்டை இரு தரப்பினரையும் வைத்து விசாரித்த மத்தியஸ்த சபையினர் இருதரப்பு ஒப்புதலுடன் இணக்கப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டு காயங்களுக்குள்ளானவருக்கேற்பட்ட மருத்துவ செலவை ஈடு செய்யும் முகமாக 13 ஆயிரம் ரூபா வழங்கி சமரசமாக தீர்வு செய்யப்பட்டது. (29-6)

## ஈ.பி.டி.பி யின் பிரசார அலுவலகம் திறப்பு

(பொன்னாலை)

பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுகின்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தற்காலிக பிரசார அலுவலகம் ஒன்று கடந்த வியாழக்கிழமை அராலி மத்தியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அராலி மத்தி கிராம அலுவலர் பணிமனைக்குச் சமீபமாகவுள்ள மேல்மாடிக் கட்டடம் ஒன்றிலேயே இவ் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (6-49)

# தனியார் கலைக் கூடங்களை பதிவு செய்யுமாறு வேண்டுகோள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள தனியார் கலைக்கூடங்களை பதிவு செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

கலாசார திணைக்களத்தால் பிரதேச ரீதியாக கலை கூடங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதை தொடர்ந்தே மேற்படி பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் பரதநாட்டியம், குச்சிப்பிடி, கதகளி, ஒடிசி, நாட்டுக்கூத்து, பரதநாட்டிய ஆராய்ச்சி, மணிப்புரி, கர்நாடக இசை மற்றும் வாத்தியம், கிராமிய நடனங்கள் போன்ற கலைகளின் கலைக்கூடங்களே பதிவு செய்யப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

இதற்கான படிவங்களை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று தமது கலைக் கூடங்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார். (6-4-29)

# சாவகச்சேரி நகரப்பகுதி வர்த்தக நிலையங்களுக்கு இரவு பாதுகாப்பு சேவை

### 14 வருடங்களின் பின் மீள ஆரம்பம்

(சாவகச்சேரி)

சுமார் 14 வருடங்களின் பின் சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தக நிலையங்களுக்கான இரவு பாதுகாப்பு சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான முன் முயற்சிகளை சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் மேற்கொண்டு வருவதாக மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார்.

மேற்படி மன்ற ஏற்பாட்டில் முன்பு நான்கு பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டு நகரில் கடமையாற்றி வந்திருந்தனர் என்றும் கடந்த 1996 ஆம் ஆண்டிலிருந்து இச்சேவை நிறுத்தப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (6-29)

## நடமாடும் மருத்துவசேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் மாவட்ட கிளையினரால் நடமாடும் மருத்துவ சேவை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மருதங்கேணியில் வாரத்தில் ஒரு தடவை திங்கட்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது.

இதில் மீள்குடியேறிய மக்கள் தொகையாக கலந்து கொண்டு பயன் அடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (134-2)

# இராசி பலன்

14-03-2010
(மாசி 30, ஞாயிற்றுக்கிழமை)
சதுர்த்தசி பின்னிரவு 1.09 மணிவரை
சதயம் பின்னிரவு 4.49 மணிவரை
இராகுகாலம் 4.51-6.21 மணிவரை
சுபநேரம் 9.21-10.51 மணிவரை
நான்காம் தவக்கால ஞாயிறு

| | |
|---|---|
| மேடம் | எடுத்த கருமங்கள் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, விருந்துபசாரம், கீர்த்தி. |
| இடபம் | நண்பர்கள் உதவி, தூரதேசச் செய்தி, தொழில் சிந்தை, உற்சாகம். |
| மிதுனம் | தந்தை வழி உறவு, அஜீரணக் கோளாறு, தேவையற்ற அச்சம், திடீர் பயணம். |
| கடகம் | வாகன பயம், காரிய தடங்கல், மரியாதைக்குறைவு, போசன சுகம். |
| சிங்கம் | முயற்சி கைகூடும், தெய்வ சிந்தை, அதிகாரம், போசன சுகம். |
| கன்னி | தன்னம்பிக்கை, பணவருவாய், காரிய நன்மை, தேகநலன். |
| துலாம் | புத்திரரால் கவலை, வேலைச்சுமை, எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம். |
| விருச்சிகம் | புதிய தகவல், ரோகபயம், தொழில் சிந்தை, சுபசெலவு. |
| தனுசு | உறவினர் வருகை, வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை, காரிய சித்தி. |
| மகரம் | கடின வார்த்தை, தனவிரயம், அமைதிக்குறைவு, முயற்சி தாமதம். |
| கும்பம் | சயனசுகம், போசன நன்மை, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி தாமதம். |
| மீனம் | பிதாசிந்தை, சுபசெலவு, உணர்ச்சி வசப்படல், காரிய தாமதம். |

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## நாய்கள் நன்றியுள்ளவை

"ஒரு நல்ல நாய் வாங்கி வளர்க்க வேண்டும் என்று எனக்கு ரொம்ப நாளா ஆசை. அதுதான் உங்கள் நாய்ப் பண்ணையைத் தேடி வந்திருக்கிறேன்."

"வாங்க... வாங்க... நாய்களை நாம வளர்க்கிறது ஒரு பக்கம் இருந்தாலும் அவற்றிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கு."

"அப்படியா சொல்றீங்க?"

"நான் சொல்லவில்லை. சாணக்கியர் சொல்கிறார்."

"உணவு மிகுதியாக இருக்கும் போது நன்றாக சாப்பிட வேண்டும். தட்டுப்பாட்டு காலங்களில் பங்கீட்டு முறையைப் பின்பற்றி திருப்தியாக இருக்க வேண்டும். சுகமாகத் தூங்க வேண்டும். தூக்கத்திலிருந்து சுறுசுறுப்பாக எழுந்திருக்க வேண்டும். தைரியத்துடன் எதிர்ப்பை முறியடிக்க வேண்டும். விசுவாசத்தோடு இருக்க வேண்டும். இந்தக் குணங்களையெல்லாம் நாம் நாய்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார்."

"கடைசியாகச் சொன்னீங்களே விசுவாசம்... அதுதான் நாய்களிடம் எனக்குப் பிடித்த குணம்."

"அதனால் தானே நன்றிக்கு உதாரணமாக நாயைச் சொல்கிறோம்"

"அந்தக் குணம் அதிகமாக உள்ள ஒரு நாய் தான் இப்பொழுது எனக்குத் தேவை. எவ்வளவு விலையானாலும் பரவாயில்லை."

"அப்படியானால் உங்கள் வலப்பக்கமாக நிற்கிறது பாருங்கள். அதை வாங்கிக் கொள்ளுங்கள். இந்தப் பண்ணையில் விசுவாசம் அதிகமாக உள்ள நாய் அது தான்."

"எதனால் அப்படிச் சொல்றீங்க?"

"இதுவரைக்கும் ஏழுதடவை அதை வித்திருக்கிறேன். வித்த மறுநாளே இங்கே ஓடிவந்துவிடும்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பெருகி வரும் மயிர்க்கொட்டிகள்

(பொன்னாலை)

வலி.மேற்குப் பிரதேசத்தில் மயிர்க்கொட்டிகளின் தொல்லைகள் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் பரவலாகத் தெரிவிக்கின்றனர்.

பங்குனி மாத வெயில் கடுமையாக அடித்து வருவதால் மரங்களிலிருந்து இறங்கும் மயிர்க்கொட்டிகள் வீடுகள், பாடசாலைகள், அலுவலகங்கள், பொதுக் கட்டடங்கள் எனப் பல இடங்களிலும் பரவுகின்றன.

தெருக்களில் நிற்கும் பெரும் பூவரச மரங்கள் மற்றும் நீண்ட நாட்களாக ஆட்கள் இன்றியிருக்கும் வீடுகளிலுள்ள பூவரச மரங்களிலிருந்தே இம் மயிர்க்கொட்டிகள் இறங்கி வருவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4-40)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 100 | 130 | 120 |
| தக்காளி | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 50 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 70 | 80 | 80 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 40-60 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கரணைக்கிழங்கு | 25 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 80 | 100 | 80 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 80 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 240 | 300 | 240 |
| போஞ்சி | 80 | 100 | 80 |
| கத்தரி தம்புள்ள | 60 | 70 | 50 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# இலங்கை வரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது

## சுற்றுலாத்துறை அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதிச் சூழ்நிலை காரணமாக இங்குவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வரவேற்கத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக சுற்றுலாத் துறை அதிகாரசபை தெரிவிக்கின்றது.

இதற்கமைய இவ்வருடத்தின் பெப்ரவரி மாதத்தில் மட்டும் சுற்றுலாப் பயணிகளின் வருகை 67.6 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் அதன்படி 57 ஆயிரத்து 300 பயணிகள் இலங்கை வந்துள்ளதாக அதிகாரசபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்த எண்ணிக்கையை கடந்த 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும்போது அந்த மாதத்தில் 34 ஆயிரத்து 169 சுற்றுலாப் பயணிகளே வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஐரோப்பா, தெற்காசியா, கிழக்காசியா, மத்திய கிழக்கு மற்றும் வடஅமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்தே கூடுதலான வர்கள் இலங்கைக்கு கடந்த மாதம் வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010 இல் போய் பார்க்க வேண்டிய 31 இடங்களில் இலங்கை முதலாம் இடம் வகிப்பதாக அண்மையில் நியூயோர்க் டைம்ஸ் சஞ்சிகை தரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# சகல மாணவர்க்கும் மிகச்சிறந்த கல்வியை பெற்றுத் தருவது எமது அடுத்த இலக்காகும்



## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை மற்றும் பல்கலைக் கழகக் கல்வி முறைகளில் மாற்றம் கொண்டு வந்து நாட்டின் சகல மாணவர்களுக்கும் மிகச் சிறந்த கல்வியைப் பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் அடுத்த இலக்காகுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உள்நாட்டுத் தேவையை மட்டுமன்றி சர்வதேச நாடுகளின் தேவையைக் கருத்திற் கொண்டதாகவும் எமது கல்வி முறை அமைய வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

களனி பிரதேசத்திற்குத் திடீர் விஜயமொன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ களனி ஹெலேனா விஜயவர்த்தன மகளிர் வித்தியாலயத்திற்குச் சென்றிருந்தார். அப் பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாம் எமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியைப் பெற்றுக்கொடுப்பது அவசியம். அது எம் அனைவரதும் பொறுப்பாகும். அவர்களை நாட்டின் சிறந்த பிரஜைகளாக உயர்த்துவதும் நமது பொறுப்பாகும். பாடசாலையின் முன்னேற்றமானது அதன் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பணிப்பிலேயே தங்கியுள்ளது என்பதே எனது நம்பிக்கை. அர்ப்பணிப்பில்லாவிடில் உயர்ச்சியை எதிர்பார்க்க முடியாது. சிறந்த அதிபர், ஆசிரியர் குழாம் மற்றும் பழைய மாணவர்கள் இருந்தால் உயர்ச்சி நிச்சயம்.

எமது கல்வி முறைமையை வலுப்படுத்த வேண்டிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டியுள்ளது. பாடசாலைகளில் மட்டுமன்றி பல்கலைக்கழகங்களிலும் சிறந்த கல்வி முறையை உருவாக்க வேண்டியுள்ளது. நாட்டின் தேவையைப் போன்றே சர்வதேச நாடுகளின் தேவையைக் கருத்திற் கொண்டு நாம் செயற்பட வேண்டியுள்ளது. அதனால் பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த கல்வியைப் பெற்றுக்கொடுப்பதே எமது அடுத்த இலக்காகும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (2-6)

# வடக்கு- கிழக்கில் கண்ணிவெடிகளை ஐந்து வருடங்களுள் அகற்றலாம்

## சர்வதேச நிறுவனங்கள் நம்பிக்கை

இலங்கையின் வடக்கு- கிழக்கு பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிவெடிகளை ஐந்து வருடங்களுக்குள் அகற்ற முடியும் என சர்வதேச நிறுவனங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

நவீன இயந்திரசாதனங்களின் பயன்பாட்டினால் இது சாத்தியமாகும் என அவை சுட்டிக்காட்டியுள்ளன.

யாழ்.கண்டி ஏ-9 வீதியில் உள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக மட்டும் 24 இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட படைவீரர்கள் ஈடுபட்டு வருகின்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# உலக தரிசனம் நிறுவனத்தால் மக்களுக்கான வாழ்வாதார உதவிகள்

(பொன்னாலை)

வட்டு.தெற்கு கிராம அலுவலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலக தரிசன நிறுவனம் (வேள்ட் விஷன்) வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளது.

கிராம அலுவலர் மற்றும் சனசமூக நிலைய நிர்வாகிகளின் சிபார்சு மூலம் தெரிவு பயனாளிகளுக்கே இவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் தையல் இயந்திரம், ஆடு, மாடு மற்றும் கோழி என்பன வழங்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

உலக தரிசன நிறுவனம் வலி.மேற்கில் தெரிவுசெய்யப்பட்ட பல கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (6-49)

# நான்கு வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைப்பு - அனுராதபுரத்தில் சம்பவம்

(கொழும்பு)

அனுராதபுரம் பகுதியில் இராணுவச் சீருடைகளை விற்பனை செய்த நான்கு வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.

இராணுவப் படையினரின் வனாந்திர சீருடைகளை குறித்த வர்த்தக நிலையங்களில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டே இச் சுற்றிவளைப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சீருடைகள் களவாடப்பட்டவை என சந்தேகிக்கப்படுகிறது.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் இந்த சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (2-6)


## வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 57வது ஆண்டு நிறைவும், வருடாந்த இல்ல தடகளப்போட்டி பெருவிழாவும் -2010

காலம்:- 14.03.2010 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணி
இடம் :- கழக மைதானம்

தலைமை
திரு.சூ.சே.குலநாயகம்
(கழக தலைவர்)

பிரதம விருந்தினர்
திரு.சண்முகம் தயாளன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்- உடற்கல்வி -யாழ்ப்பாணம்)

கௌரவ விருந்தினர்கள்
திரு.A.சற்குணபாலன்
(முகாமையாளர்- சம்பத்வங்கி, நெல்லியடி)

திரு.T.செல்வசபாபதிப்பிள்ளை
(தலைவர்- நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில்)

திரு.D.M.வேதாபரணம்
(தலைவர்-பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்)

திரு.K.மயிலேறும்பெருமாள்
(மாவட்ட வைத்திய அதிகாரி -வல்வெட்டித்துறை)

திரு.A.வசந்தன்
(பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர்)

திரு.K.திருமாலழகன்
(ஆசிரியபீடம் -வலம்புரி நாளிதழ்)

நிகழ்ச்சி நிரல்
- மங்கல விளக்கேற்றல்
- கொடியேற்றல்
- அமைதி வணக்கம்
- அணிநடை
- ஒலிம்பிக் தீபமேற்றல்
- சத்தியப்பிரமாணம்
- விழாவை ஆரம்பித்தல்
- இல்லங்களிடையேயான விளையாட்டு நிகழ்வு
- தடகளப் போட்டிகள்
- ஏனைய கழக விளையாட்டுக்கள்
- உடற்பயிற்சி நிகழ்வுகள் (ஆண்கள்,பெண்கள்)
- பாரம்பரிய விளையாட்டுக்கள்
- தலைவர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை
- பரிசில் வழங்கல்
- இன்னிசை நிகழ்வு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

01.03.2010

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம்
வல்வெட்டித்துறை


# நூல்கள் மீதான ஈர்ப்பு சக்தியினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர்

(சாவகச்சேரி)

தற்காலத்தில் இளம் சந்ததியினரின் மத்தியில் நூல்களை வாசிக்கும் பழக்கம் பல்வேறு காரணங்களால் அருகி வருகின்றன. இக் குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் முகமாகவும் நூல்களின் மீதான ஈர்ப்பு அதிகரிக்கும் விதத்திலும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் வடமாகாண உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவித்துள்ளார்.

அவர் மேலும் இது பற்றி தெரிவித்திருப்பதாவது,

ஐக்கிய நாடுகள் சபையினால் 1972 இல் அனைத்துலக நூல் ஆண்டு கொண்டாடுவதென தீர்மானித்ததன் பிரகாரம் ஏப்ரல் 23 திகதியினை உலக புத்தக தினமாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

உலகின் மிகச்சிறந்த எழுத்தாளர்களான சேக்ஸ்பியர், வில்லியன் லேட் வேர்த் ,புரூக் போன்ற எழுத்தாளர்கள் ஏப்ரல்23 ஆம் திகதியே பிறந்தார்கள்.இந்த வரலாற்றுச் சிறப்பைக் குறிக்கும் நாளாக ஏப்ரல் 23 ஆம் திகதியினை அனைத்துலக புத்தக தினமாகக் கொண்டாட தீர்மானிக்க ப்பட்டுள்ளது.

1972 ஒக்டோபர் 22 இல் பாரிசில் எழுத்தாளர்கள் ஒன்று கூடி இது சம்பந்தமான ஒரு திட்டத்தை வகுத்தார்கள் அதில்,

ஒவ்வொருவருக்கும் படிப்பதற்கு உரிமை உண்டு,கல்விக்கு நூல்கள் கட்டாயம் தேவை , நல்ல எழுத்தாளர்கள் உருவாகும் நிலையினை சமூகம் உருவாக்க வேண்டும், தேசிய வளர்ச்சிக்கு நல்ல நூல்கள், பதிப்புத் தொழில் தேவை, பதிப்பக வளர்ச்சிக்கு நூலக வசதிகள் வேண்டும், படிப்பாளரையும் பதிப்பாளரையும் இணைக்க வேண்டும் என்றும்

மேலும் அழகை ரசிக்க , சுவர் அறிவை அனுபவிக்க தகவலையும் அறிவையும் தரும் நூல்கள் நாட்டின் கருவூலங்கள் ஆகும், நூல்களை ஆக்கவும், கருத்துக்களை வளர்க்கவும், ஆவணத் தொகுப்பு உதவவேண்டும், உலக ஒருமைப்பாட்டை வளர்க்க, நாடுகளிடையே நூல்கள் சரளமாக பரிமாறிக் கொள்ளப்பட வேண்டும், உலக மக்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள- வளர- சிறக்க நூல்கள் பெரும் பணியாற்றுகின்றன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்கூறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எமது உள்ளூராட்சி மன்ற பொது நூலகங்களிலும், பாடசாலைகளிலும் இப் புத்தக தினத்தினைக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதாக அமையும். பொது நூலகங்களால் நடத்தப்படும் இந்நிகழ்வுகளில் அப்பிரதேச பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொள்ளக்கூடியதான ஏற்பாடுகளைச் செய்வது மிகுந்த வினைத்திறனுள்ளதாக அமையும் என்றும் இளம் சந்ததியினர் நூல்களில் நாட்டம் கொள்ளத்தக்க வகையிலும் அவர்களே கருத்துக்களை பிரதிபலிக்கத் தக்கவகையிலும் செயற்பாடுகள் அமைக்கப்படுவது வரவேற்கத்தக்கது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-4-29)



# அவள் பெயர் தமிழரசி



கிராமத்து பெரிய குடும்பத்துச் செல்லப்பிள்ளை ஜெய். தாயின் மறைவுக்குப் பின்னர் தந்தை வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு சென்றுவிட, தாத்தாவின் அரவணைப்பில் வளர்கிறார். அந்தக் கிராமத்துக்கு தோல்பாவை கூத்து நடத்த வருகிறது ஒருநாடோடிக் குடும்பம். அந்தக் குடும்பத்தின் பெண் குழந்தை தமிழரசி மீது ஜெய்க்கு ஈர்ப்பு. கூத்து முடிந்து குடும்பம் வேறொரு ஊருக்கு செல்ல தயாராகிறது. ஆனால் ஜெய்-தமிழரசி அன்பு அவர்களை அந்த ஊரிலேயே நிரந்தரமாக தங்கவைக்கிறது. வெறும் எதிர்பாலின ஈர்ப்பாக இருந்த இவர்கள் அன்பு உரிய பருவத்தில் காதலாக மாறுகிறது.



பாடசாலை இறுதித் தேர்வில் ஜெய் தோல்வி அடைய, தமிழரசியான நந்தகி மாவட்ட அளவில் முதல் மாணவியாகிறார். இதனால் ஜெய்க்கு ஏற்படும் ஈகோவால் நந்தகி தன்னை விட்டுப் போய்விடுவாளோ என்கிற கவலை வருகிறது. அவரை பலாத்காரம் செய்வதே பிரிவை தடுக்கும் வழி என நண்பர் சொல்வதை ஏற்றுக்கொள்கிறார். அதை செய்யும் முடிக்கிறார்.

நந்தகியின் வாழ்க்கையை அந்த செயல் புரட்டிப்போடுகிறார். விடயம் தெரிந்த அம்மா, தற்கொலை செய்கிறார். நந்தகியோ காணவில்லை. அவரை தேடி அலைகிறார் ஜெய். நந்தகி கிடைத்தாரா என்பது மீதிக்கதை . அறிமுக நாயகி நந்தகி தமிழரசியாகவே வாழ்ந்திருக்கிறார். ஒரு புதுமுகத்துக்குள் இத்தனை ஆழமான நடிப்பா என்று அதிசயிக்க வைக்கிறார். மின்மினி பூச்சிகளை பிடித்துத்தர கேட்கும் வெகுளித்தனமும் கெடுத்தவன் யார் என்று கேட்டு அம்மா அடிக்கையில் யாரென்னு சொல்லாமல் காட்டும் பிடிவாதமும் யதார்த்தம். கிளைமாக்சில் பக்குவமான நடிப்பும் முதல் படத்திலேயே நந்தகியை நல்ல நடிகைகள் பட்டியலுக்குள் சேர்க்கிறது. சிறிய இடைவெளிக்குப் பின்னர் ஜெய் தனக்கான கதைக்குள் வந்திருக்கிறார். முகத்தில் தாடியும், தாடிக்குள் சோகத்தையும் வைத்துக்கொண்டு காதலியை தேடிச் செல்லும் பயணத்தில் நம்மையும் அழைத்துச் செல்கிறார்.

பாடசாலை மாணவனுக்கான முகவெட்டும், உடல் மொழியும் ஜெய்க்கு கச்சிதமாக இருக்கிறது. ஆனால் பல கனமான காட்சிகளில் கரக்டரிலிருந்து விலகியே இருப்பது மைனஸ். ஓவியர் வீர சந்தானம் தோல்பாவை கூத்து கலைஞனின் வலியை அற்புதமாக பதிவு செய்திருக்கிறார். குடும்ப கட்டுப்பாடு சத்திரசிகிச்சை செய்துவிட்டதாக கஞ்சா கருப்பு பற்றி தகவல் பரவி, அவர் படும் அவஸ்தைகள் சிரிப்பு ஏரியா. விஜய் ஆண்டனியின் இசையில் பாடல்கள் சுவையான கலவை. பின்னணி இசையில் வலு குறைவு. பி.முத்தையாவின் ஒளிப்பதிவு கிராமத்து யதார்த்தத்தை அழகாக காட்சிப்படுத்தப்படுகிறது. ஹீரோயின் குடும்பத்தில் வலிந்து வடநாட்டு குடும்பம் திணிக்கப்படும்போதே கதையின் முடிவு தெரிந்து விடுவதும், காரணமே இல்லாமல் ஜெய்யின் அப்பா அவரை வெறுப்பதும் திரைக்கதையின் பலவீனங்கள்.

முதல் படத்திலேயே கனமான கதையை கையில் எடுத்திருக்கும் இயக்குநர் மீரா கதிரவனை பாராட்டலாம். அதை கொடுத்த விதத்தில் சில குறைகள் இருப்பதால் மனதை வருடவில்லை.

அவள்பெயர் தமிழரசி; தமிழ்சினிமா சரித்திரத்தில் ஆட்சி செலுத்தும் பேரரசி

## ஒரு ஹீரோவுக்கு 21 ஹீரோயின்கள்!

ஊர்வசி- லலிதா-லலிதா-லாவண்யா இந்த பெண்பால் பெர்களை சுருக்கி உருவாகி வரும் படம் ஊலலா.பிரபல பட அதிப்ர் ஏ.எம். ரத்னத்தின் வாரிசும், 'கேடி', ' எனக்கு 20 உனக்கு 18" படங்களின் இயக்குநருமான ஏ.எம். ஜோதிகிருஷ்ண திரைக்கதை எழுதி இயக்கு வதுடன், கதாநாயகனாகவும் நடிக்கிறார்.



இப்படத்தின் கதைக் களம் இளம் ஆண்களுக் கும், இளம் பெண் களுக்கும் இடையே உள்ள நட்புதானாம். போய்ஸுக்கும், கேர்ள்ஸுக்கும் இடையே உள்ள நடப்பு கடைசி வரை நட்பாக மட்டுமே இருக்குமா? இல்லை காதலாக மாறுமா? என்பதை சொல்லும் கதைக் கருவைக் கொண்ட இப்படத்தில் மொத்தம் 21 ஹீரோயின்கள் நடிக் கிறார்கள் என்கிறார் ஹீரோ ஜோதிகிருஷ்ணா.

முக்கிய நாயகியாக ப்ரீத்தி பண்டாரி நடிக்க அவருடன் மேலும் 20 நாயகிகள் நடிக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் தனிச்சிறப்பான கரக்டர் கொடுத்திருப்பதாகக் கூறும் ஜோதிகிருஷ்ணா, ஊலலாவை மே மாதம் ரிலீஸ் செய்ய திட்ட மிட்டிருக்கிறாராம்.

## உலகம் அழியாது!

# ஹொலிவுட்டுக்கு போட்டியாக தமிழ்படம் 'சரவணபவ'

அடிக்கடி அதிர்வையும் சுனாமி அழிவையும் சந்தித்து வரும் அந்தமானில் முழுக்க முழுக்க படமாகியிருக்கும் தமிழ்ப்படம் சரவணபவ. 2012 ஆம் ஆண்டிலோ, 2022 ஆம் ஆண்டிலோ உலகம் அழியும் என ஹொலிவுட் படங்கள் பிரமாண்டமாகக் கூறிவரும் வேளையில் அப்படி ஒரு அழிவுக்கு வாய்ப்பே இல்லை என்று கூறி வரவிருக்கிறது இந்தப் படம்.

உலகம் ஒருபோதும் அழியாது.கலியுகக் கடவுள் கந்தனின் அவதாரத்தாலும், அருளாலும் உலக அழிவு தடுக்கப்படும் எனும் கருத்தை வலியுறுத்தும் சரவணபவ படத்தை கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியிருக்கிறார் ஆதவன்.கடவுள் பாலமுருகன் அவதாரமாக மாஸ்டர் சுதாமா சபரிகிரீஸ்வரன் நடிக்க அவருடன் புதுமுகங்கள் சதீஷ், செல்வராஜ், பாரதி, தேசிங்கு ராஜா, காளை, மீனாட்சி மைந்தன் தீபா உள்ளிட்டவர்கள் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர்.



பிஞ்சு மனசு, தமிழ்த் தேசம் உள்ளிட்ட படங்களுக்கு இசையமைத் துள்ள இந்தியன் இசையில் மொத்தம் 5 பாடல்கள்.புதியவர் மீனாட்சி மைந்தன் பாடல்கள் அனைத்தை யும் எழுதியிருக் கிறார்.இவர்தான் படத்தில் மந்திரவாதியாகவும் சாமியாராகவும் இரட்டை வேடம் கட்டியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக் கது.

ஜீவனின் ஒளிப்பதிவு, ராம் முருகேசனின் நடனம், கணேஷனின் படத்தொகுப்பு உள்ளிட்ட சிறப்புக் களுடன் சரவணபவ படத்தை மூலக்கதை எழுதி தயாரித்துள்ளார் அந்தமானைச் சேர்ந்த ஆன்மீகவாதி டி.ஆர்.எஸ்.ரமணி அய்யர் சுவாமிகள்.

# தமன்னாதான் வேணும் அடம்பிடிக்கும் கார்த்தி



தனக்கு ஜோடியாக தமன்னா தான் நடிக்கவேண்டும் என்று நடிகர் கார்த்தி அடம்பிடித்து, அதில் சாதித்து விட்டார். பருத்திவீரன் வெற்றிக்குப்பின்னர் பெரும் எதிர்பார்ப்புக்குரிய நாயகனாக திகழும் கார்த்தி, ஆயிரத்தில் ஒருவன் படத்தில் கமிட் ஆனார். அந்தப்படத்தின் சூட்டிங் இழு இழுவென இழுத்து ஒருவழியாக வெளியாகியது. எதிர்பார்த்த அளவுக்கு ஓடா விட்டாலும், கார்த்தியின் புகழுக்கு ஒன்றும் குறைவில்லை.

அதனைத் தொடர்ந்து லிங்குசாமி இயக்கத்தில் உருவான பையா விரைவில் ரிலீஸ் ஆகப்போகிறது.பையாவைப் பொறுத்தவரை கண்டிப்பாக வெற்றிப்படம் என்கிற நிலை உருவாகிவிட்டது. இதற்குக் காரணம் முதல்வர் கருணா நிதியின் பேரனும், மத்திய அமைச்சர் அழகிரியின் மகனுமான தயாநிதி அழகிரி பையாவை வாங்கியிருப்பதுதான்.

பெரிய இடத்துப்பிள்ளையின் படம் என்பதால் திருட்டு விசிடிக் காரர்கள் கொஞ்சம் அடக்கியே வாசிப்பார்கள் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டுமா என்ன?

சரி... விடயத்துக்கு வருவோம். பையாவைத் தொடர்ந்து கார்த்தி நடிக்கவுள்ள படம் சிறுத்தை. நடிகர் பாலாவின் சகோதரரும், பிரபல ஒளிப்பதிவாளருமான சிவா தெலுங்கில் இயக்கிய "விக்கிரமார்குடு" என்ற சூப்பர் ஹிட்படத்தின் ரீ-மேக்தான் சிறுத்தை. படத்தின் நாயகியாக நடிக்க முதலில் அனுஷ்காவை அணுகிய டைரக்டர், ஓ.கே. வாங்கி விட்ட நிலையில், தமன்னா தான் தனக்கு ஜோடியாக நடிக்கவேண்டும் என்று கார்த்திக் அடம்பிடிக்கிறார்.

இதையடுத்து தமன்னாவிடம் கதை சொல்லியிருக்கிறார் சிவா. தமன்னாவும், கார்த்தி ஜோடியாக நடிக்க இரட்டைச் சம்மதம் சொல்லியிருக்கிறாராம்.(தம்முவுக்கு கதை முக்கியமா? கார்த்திக் முக்கியமா?




# விக்ரம், அஜித், விஜய் தமிழில் '3 இடியட்ஸ்'



இந்தியில் அமீர்கான், மாதவன் நடிப்பில் ஹிட்டான படம்" 3இடியட்ஸ்' இதன் ரீமேக் உரிமை வாங்க பலத்த போட்டி நிலவிவந்த நிலையில் பிரபல தயாரிப்பு நிறுவனமான ஜெமினி பிலிம் சேர்க் கியூட் 3 இடியட்ஸ் படத் தின் தமிழ் உரிமையை வாங்கியுள்ளது. ஜெமினி பிலிம் சேர்க்கியூட் தயாரிப்பில் விஷ்ணுவர்தன் இப்படத்தை இயக்கப் போவதாக செய்திகள் அடிபட்டு வருகின்றன. முன்னதாக 3 இடியட்ஸ் படத்தில் விஜய் ஹீரோவாக நடிக் கிறார் என்று தகவல் கொலிவுட்டில் பரவிவந்தன.

இந்நிலையில்"3இடியட்ஸ்" (இந்தி) படத்தில் நடித்த மாதவன் 3 இடியட்ஸ் தமிழ் ரீமேக்கில் விஜய், அஜித் மற்றும் விக்ரம் நடிக்கவேண்டும் என்ற கோரிக்கையை விடுத்துள்ளார். நிகழ்ச் சிக்கு ஒன்றுக்கு வந்த மாதவன், 3 இடியட்ஸ் தமிழில் ரீமேக் ஆவது சந்தோஷமாக உள்ளது என்றும் விக்ரம், அஜித் மற்றும் விஜய் நடித் தால் கண்டிப்பாக பொலிவுட்டை விட ஹொலிவுட்டில் சுப்பர் ஹிட் ஆகும் என்றும் மாதவன் கூறினார்.




கொமர்ஷல் வங்கியின்

பின்வரும் கிளைகளில் மணிகிராம் ஊடாக வெளிநாட்டிலிருந்து பணத்தை தருவித்து பரிசில்களை வென்றிடுங்கள்

மார்ச் 22ம் திகதி – 26ம் திகதி வரை

- வவுனியா
- சாவகச்சேரி
- யாழ்ப்பாணம்
- ஸ்டான்லி வீதி
- நெல்லியடி
- சுன்னாகம்

COMMERCIAL BANK
www.combank.lk

MoneyGram.
International Money Transfer


Emerald®
உத்தரவாதமிக்க
தரம்
சேர்ட் என்றால்
எமரல்ட் மட்டுமே
தற்போது உங்கள் நகரிலும் சர்வதேச வர்த்தக நாமங்கள்
நிறுவனத்தால் குறிக்கப்பட்ட விலை
ஆர்யா
விற்பனையாளர்கள்:
ரி. குமாரசாமி டெக்ஸ்டைல்ஸ் : 44,42 – கிராண் பஸர், யாழ்ப்பாணம்.
ஸ்டைல் பார்க் : 171, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
லிங்கம் சில்க் ஹவுஸ் : புதிய சந்தை, பவர் ஹவுஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தி. சங்கரப்பிள்ளை : 21, பவர் ஹவுஸ் வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
சிவராதா : 26 – 28, பெரியகடை பசார், யாழ்ப்பாணம்.
சீமாட்டி : 122, பவர் ஹவுஸ் வீதி, யாழ்ப்பாணம்.
கமலேஜ்வரி : 25, கிராண் பஸார், யாழ்ப்பாணம்.
காவேரி சில்க்ஸ்:பெரிய கடை,யாழ்ப்பாணம்.
நியூ அபிராமி ரெக்ஸ்ரைல்ஸ்,பெரிய கடை,யாழ்ப்பாணம்




## உலகப் புகழுக்கு 9 கட்டளைகள்

- வித்தியாசமான யோசனைகள் தான் வெற்றியடையும்
- எல்லோருக்கும் அப்படி ஒன்று கண்டிப்பாக வரும். தவறவிடாதீர்கள்.
- கற்பனைக்கு தடை போடாதீர்கள்.
- செயலைத் தொடங்கிய பின் மாற்று சிந்தனை வேண்டாம்.
- தோல்விகளுக்கு அஞ்சாதீர். ஜெயிக்காமல் விடமாட்டேன் என்று அடிக்கடி சொல்லுங்கள்.
- சொந்த துக்கங்களில் ஆழ்ந்து போகாதீர். செயல் முக்கியம்.
- எதைச் செய்தாலும் ஒரு ஈடுபாடு அவசியம்.
- பொழுது போக்காகச் செய்யும் போது எந்தக் கலையும் அதன் உன்னதத்தை அடையாது. தீவிரமாக இறங்குங்கள்.
- மனித நேயம் பழகுங்கள். அதுதான் புகழ்நிலைக்க வழிசெய்யும்.

## ஓகோ !

- நாய்கள் போல் குரைக்கும் மற்றொரு விலங்கு வரிக்குதிரை.
- குரங்குகள் அதிகம் உள்ள நாடு பிரேசில்.
- தேனீ எறும்பு இனத்தைச் சேர்ந்தது.
- கோழியின் இமைகள் கீழிருந்து மேலாக மூடும்.
- ஆமைக்கு பற்கள் கிடையாது.

## இரட்டை... இரட்டை

இரட்டைக் கோள்கள் –பூமி, செவ்வாய்
இரட்டைக் காப்பியங்கள் – மணிமேகலை, சிலப்பதிகாரம்
இரட்டை கண்டங்கள் –ஆசியா, ஐரோப்பா
இரட்டைக் கவிஞர்கள் –அந்தக்கவி, அதிமதுரக்கவி
இரட்டை நகரங்கள் –ஹைதராபாத், செகந்திராபாத்
இரட்டை நதிகள் – யூப்ரடிஸ் , டைக்ரிஸ்

## வினோதம்

இது ஒரு வினோதமான சட்ட விதிமுறை.

நாய், பூனை போன்ற வீட்டு வளர்ப்பு பிராணிகளை இரவு நேரத்தில் வெளியே அழைத்துச் செல்லும்போது அவற்றின் வாலில் விளக்கு பொருத்தி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அபராதம் விதிக்கப்படும்.

'இந்த சட்டவிதிமுறை எங்கே இருக்கிறது தெரியுமா ? அமெரிக்காவின் ஓஹையோ மாநிலத்தில் தான். விபத்துக்களைத் தடுக்கவும், உயிரினங்களை பாதுகாக்கவும்தான் இந்தச் சட்டம்.

# தொலைக்காட்சியின் வரலாறு

அம்மாவிடம் இருந்து குழந்தைகள் படி, சாப்பிடு, தூங்கு என வரும் எந்தக் கட்டளையாக இருந்தாலும் "ப்ளிஸ்ம்மா" இன்னும் கொஞ்சநேரம் என்று சிணுங்கிய படி அதைப்பார்ப்பதில் லயித்து விடுவார்கள். மிஸ்டர் பீன், டோரா புஜ்ஜி, பவர் ரேஞ்சர்ஸ் , டொனால்டு டக் என மனங்கவர்ந்த கதாபாத்திரங்கள் எல்லாம் நமது வீட்டு தொலைக்காட்சிப் பெட்டியில் வரும் போது குழந்தைகள் எழுந்திருப்பார்களா என்ன? அந்தளவுக்கு குழந்தைகளை மட்டும் இன்றி பெரியவர்களையும் கட்டிப் போடும் ஒரு சாதனம்தான் தொலைக் காட்சிப் பெட்டி! அதன் வளர்ச்சியையும் வரலாறையும் பார்ப்போமா.

1884இல் முதல் முதலாக ஜெர்மனியில் பால் நிப்கௌ 'ஒப்டிகல் ஸ்கானிஸ் டிஸ்க்" க்குக்கான காப்புரிமம் பெற்றார். அதை "எலக்ட்ரிசெஸ் டெலஸ்காப்" என்றனர்.

1897 இல் ஜெர்மனியின் ஃபெர்டினான்ட் பாருன் முதல் "கேத்தோட் ரே ஒக்ஸிலோஸ்கோப்" அறிமுகப்படுத்தினார்.

ரஷ்யாவின் போரிஸ் ரோஸிங் 1907 இல் முதல் முதலாக காற்று வழியாக உருவத்தை ஒளிபரப்புச் செய்தார்.

1908 இல் ஸ்கொட்லாந்தின் ஆலன் ஆச்சிபால் முதல் முதலாக கேத்தோட் ரேவைப் பயன்படுத்தி எலக்ட்ரோனிக் டெலிவிஷனை உருவாக்கலாம் என்று கட்டுரை எழுதினார்.

1923 ஜூலையில் ஸ்கொட்லாந்தின் ஜான் லோகி போட் (John Logie Baird) மெக்கானிக்கல் டெலிவிஷன் முறைக்கான காப்புரிமம் பெற விண்ணப்பித்தார்.

அதே ஆண்டு நவம்பரில் ரஷ்யாவின் விளாடிமிர் சௌரிகின் கேத்தோட் ரே டெலிவிஷனுக்கான காப்புரிமம் பெற விண்ணப்பித்தார்.

1925 இல் முதல் முதலாக டெலிவிஷனில் தோன்றிய மனிதர் இங்கிலாந்தின் வில்லியம் டைன்டன். இவர் ஜோன் லோகி போட்–வின் சோதனை ஒலி, ஒளி பரப்பில் தோன்றினார்.

## முதல் முதலாக

1926 இல் ஜோன் லோகி போர்ட் முதல் முதலாக மக்கள் மத்தியில் டெலிவிஷனை செயல்படுத்திக் காட்டினார்.





1927 இல் தொலைக்காட்சியின் முதல் என்டர்டெய்னராக நகைச்சுவை நடிகர் ஏ.டோலன் தோன்றி நடித்தார்.

1928 இல் ஜோன் லோகி போர்ட் முதல் முதலாக வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளைத் தயாரித்தார்.

1928 செப்ரெம்பரில் நியூயோர்க் தொலைக்காட்சி நிலையம் ஒலி, ஒளிபரப்பிய 'தி குயின்'ஸ் மெஸெஞ்சர் என்னும் நாடகம் தான் தொலைக்காட்சியில் முதல் நாடகம்.

தி.போர்ட்கோ ஒலிபரப்பிய பானைகள் செய்வது பற்றிய தொடரே லண்டன் டெலிவிஷன் நிலையத்தின் பார்வையாளருக்கான அட்டவணைப் படியான நிகழ்ச்சியாகும்.




1929 இல் உலகப் புகழ்பெற்ற பி.பி.சி (BBC) தொலைக்காட்சி நிறுவனம் தொடங்கப்பட்டது.

1931இல் முதல் முதலாக ஜப்பானின் வசேடா பல்கலைக்கழகத்தின் "பேஸ்போல்" ஆட்டம் டெலிவிஷனில் ஒலிபரப்பப்பட்டது. இதுதான் முதல் முதலாக டெலிவிஷனில் காட்டப்பட்ட விளையாட்டு நிகழ்ச்சியாகும்.

1934 இல் முதல் முதலாக தொலைக் காட்சியில் ஜேர்மனியின் "உர்சுலா பட்ஸெக்" அறிவிப்பாளராகத் தோன்றினார். இவர்தான் தொலைக்காட்சியில் தோன்றிய முதல் அறிவிப்பாளர்.

1937 இல் ஃபிரான்சின் மார்செல் பௌஸ்டின்தான் தொலைக்காட்சியில் தோன்றிய முதல் சமையல் கலைஞர். இவர் தோன்றிய நிகழ்ச்சியின் பெயர் "குக்ஸ் நைட் அவுட்" ஆகும்.

பிரிட்டனில் முதல் முதலாக 1946 இல் குழந்தைகளுக்காக " ஃபார் தி சில்ரன்" என்ற தொடர் ஆரம்பிக்கப்பட்டது. இதுதான் குழந்தைகளுக்கான முதல் டெலிவிஷன் நிகழ்ச்சி.


1949 இல் முதல் முதலாக பிரிட்டன் டெலிவிஷனில் வானிலை அறிக்கை அறிவிக்கப்பட்டது.

முதல் முதலாக டெலிவிஷனில் 1955 இல் கிப்ஸ் நிறுவனத்தின் பற்பசை விளம்பரம் இடம்பெற்றது.

1960, டிசம்பர் 9 அன்று பிரிட்டன் டெலிவிஷனில் உலகிலேயே மெகா சீரியலான " காரனேஷன் ஸ்ட்ரீட்" தொடங்கப்பட்டது. கடந்த பெப்ரவரி 18, 2010 அன்றைய பகுதியுடன் சேர்த்து, 7276 எபிசோட்டுகள் ஒலிபரப்பு செய்திருக்கிறார். இந்தியாவில் 1980 களின் ஆரம்பத்தில் டெலி விஷன் நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டன.

இந்தத் தொலைக்காட்சி வரலாற்றில் இராமாயணமும், மகாபாரதமும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய தொடர்களாகும்.

உலகிலேயே அதிக மக்கள் பார்த்த தொடர்கள் இவைதான்.



ஜெயந்தா கைத்தொழில் பூங்கா நிறுவனத்தினால் பருத்தித்துறை கற்கோவளத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஐஸ்தொழிற்சாலை திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். யூனியன் வங்கி முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் நிறுவன தலைமை நிறைவேற்று அதிகாரி பொறியியலாளர் ரீ.சேந்தன் ,பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் எஸ்.சுந்தரேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிறுவனத்தின் பணிப்பாளரும் நிதிக் கட்டுப்பாட்டாளருமான திருமதி எஸ்.ஜெயந்தா, ஐஸ்கட்டி விற்பனையை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

# இலங்கை-ஆப்.அகதிகள் தொடர்பான நடைமுறைகளை மீளாய்வு செய்ய திட்டம்

## ஐ.நா .தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் அகதிகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் வழிகாட்டல்களில் மீளாய்வு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

அகதி அந்தஸ்து குறித்த ஐக்கிய நாடுகளின் மீளாய்வின் பின்னர் அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரும் பலருக்கு அந்த சந்தர்ப்பம் கிடைக்கப் பெறாதென அந்நாட்டு ஊடகமொன்று எதிர்வு கூறியுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இரண்டு நாடுகளினதும் அகதிகள் தொடர்பான வழிகாட்டல்களை திருத்தியமைப்பதில் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் கூடுதல் சிரத்தை எடுத்துக்கொள்வதாகவும் பெருமளவான அகதிகள் அவுஸ்திரேலியாவை நோக்கி செல்வதால் போரினால் பாதிக்கப்பட்ட நாடுகள் தொடர்பில் மீண்டும் ஒரு ஆய்வை மேற்கொள்ளும் நிலைக்கு ஐ.நா. தள்ளப்பட்டுள்ளதாகவும் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து செல்லும் அகதிகளின் பாதுகாப்பு தொடர்பான நடைமுறைகளை தரமிறக்கவுள்ளதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

மேலும் ஆப்கானிஸ்தானில் இருந்து அதிகளவிலான அகதிகள் அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கு வந்துள்ளதாகவும் கிறிஸ்மஸ் தீவுகளில் உள்ள தடுப்பு முகாம்களில் 700 இலங்கை அகதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் உள்துறை அமைச்சுப் பேச்சாளர் பிரண்டன் கோர்னர் தெரிவித்துள்ளார். (2-6)

# பாத்திமா ரிசானா வழக்கு விசாரணையில் ஐ.நா. தலையீடு செய்ய வேண்டும்

## ஆசிய மனித உரிமை ஆணைக்குழு

இலங்கைப் பணிப்பெண் பாத்திமா ரிசானா வழக்கு விசாரணைகளில் ஐக்கிய நாடுகள் அமைப்பு தலையீடு செய்ய வேண்டுமென ஆசிய மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

சவூதி அரேபியாவில் வீட்டுப் பணிப் பெண்ணாக கடமையாற்றிய இலங்கையைச் சேர்ந்த பாத்திமா ரிசானா, குழந்தை ஒன்றை படுகொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் 2005 ஆம் ஆண்டு முதல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ரிசானாவின் வழக்கு விசாரணைகளை 2010 ஜனவரி மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாக கடந்த டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி சவுதி நீதிமன்றம் அறிவித்திருந்தது.

எனினும் இதுவரையில் ரிசானா குறித்த வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என ஆசிய மனித உரிமைகள் பேரவை விசனம் வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை தலையீடு செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் ரிசானா வழக்கு விசாரணைகளின் போது மொழி பெயர்ப்பாளராக கடமையாற்றிய கேரளாவைச் சேர்ந்தவர் சவுதியை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# தங்க இறக்குமதிகள் மீதான வரிகள் நீக்கப்படுகின்றன

தங்க இறக்குமதிகள் மீது ஏற்புடைத்தான அனைத்து வரிகளும் மற்றைய தீர்வைகளும் 2010 மார்ச் முதலாம் திகதி நாளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தங்கத்தின் இறக்குமதிகள் மீதான ஏற்புடைத்தான அனைத்து இறக்குமதி வரிகளும் மற்றைய தீர்வைகளும் அகற்றப்படுகின்றமையானது சந்தையில் தங்கத்தின் விலைகளைக் குறைவடையச் செய்து நாட்டின் தங்க மற்றும் ஆபரணக் கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்படுவதற்குப் பங்களிக்கும் என்றும் இதற்கமைய வர்த்தக வங்கிகளும் மற்றைய அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களும் கைத் தொழில் தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் விதத்தில் அவர்களது தங்க இறக்குமதிகளை தற்பொழுது அதிகரிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# நாட்டில் பாதிப்பை ஏற்படுத்தி வரும் இனம் தெரியாத சிறுநீரக நோய்

(கொழும்பு)

இலங்கையின் சில மாகாணங்களில் பாதிப்பை ஏற்படுத்தி வரும் ஒரு வகைச் சிறுநீரக நோய்க்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லையெனச் சுகாதார அமைச்சு கூறுகிறது.

உலகின் எந்தவொரு நாட்டிலும் இந்த நோய்க்கான காரணம் இதுவரை உறுதி செய்யப்படவில்லையென சுகாதார சேவைகள் பணிப்பாளர் அஜித் மெண்டிஸ் குறிப்பிட்டார்.

இதற்கமைய இலங்கையில் இந்த நோய்க்கான காரணியைக் கண்டறிவதற்காக பல்கலைக்கழக புத்திஜீவிகளை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இதேவேளை மருத்துவ ஆய்வு நிலையமும் இந்த நோய் தொடர்பான ஆய்வுகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது அனுராதபுரம், பொலநறுவை, கிராந்துருக்கோட்டை, அம்பாறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பலர் இந்தச் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (2-6)


## மீண்டும் GNANA (ஞானா) BEAUTY PARLOUR

அதி நவீன முறையில்

* Bridal/Convocation/Dance make up
* Facial for different types of skin with treatment
* manicure & pedicure
* Hair cutting/Hair styles
* Threading
* waxing
* wedding/ Birthday Cake orders are undertaken



மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் தொடர்புகொள்ளவும்

162,ஆடியபாதம் வீதி (பொற்பதி சந்திக்கு அருகாமையில்),
கொக்குவில்.
T.P: 222 3885

(831)


# இந்தோ.- இலங்கை இடையில் விசேட உடன்படிக்கை

## திவயின செய்தி வெளிட்டுள்ளது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் பல்வேறு வழிகளில் இந்தோனேசியாவிற்குள் ஊடுருவுவதனை தடுக்கும் நோக்கில் இலங்கைக்கும் இந்தோனேஷியாவிற்கும் இடையில் விசேட உடன்படிக்கையொன்று விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் சர்வதேச வலையமைப்பை இல்லாதொழிக்கும் நோக்கில் இலங்கை அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் இந்த உடன்படிக்கையில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் இதுவரையில் தகவல்கள் வெளியிடப்படவில்லை. (2-6)

# 183 இலங்கை மீனவர்கள் இந்திய தடுப்புச் சிறையில்

## கடற்தொழில் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட 183 இலங்கை மீனவர்கள் தொடர்ந்தும் அந்நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கடற்றொழில் அமைச்சு கூறுகிறது.

·இதில் 28 மீனவர்களை விடுவிப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளதாகவும் அவர்களை விமானம் மூலம் நாட்டுக்கு அழைத்து வரவுள்ளதாகவும் இதற்காக அமைச்சு ஒரு மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மீனவர்களை விடுவிக்க அமைச்சின் செயலாளர் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோர் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்திய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த மீனவர்கள் திருகோணமலை, கற்பிட்டி, தேவேந்திரமுனை ,தங்காலை, மிரிஸ்ஸ, தெவிநுவர போன்ற பகுதி களைச் சேர்ந்தவர்களென கடற்றொழில் அமைச்சு கூறுகிறது. (2-6)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென் சாள்ஸ் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் எம். ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மரியாள் ஆலய பங்குத்தந்தை சகாயநாயகம், சிறப்பு விருந்தினர்களான யாழ். மாநகரசபை உறுப்பினர் எஸ்.விஜயகாந், விசேட விருந்தினர்களாக யாழ். நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியர் வி. பரமநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-3)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேசசங்க பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் புனித சார்ள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரமும் சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேச செயலக கணக்காளர் வே.வேல்நிதி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இக்கூட்டத்தில் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.பிரதேச ஓய்வூதியக் கிளையில் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (2-134)

## கரித்தாஸ் - கியூடெக் மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தினால் பெண்ணே விழி சமூகம் விழிப்படைய மகளிர் தின நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் G.B.V. செயற்குழு இணைப்பாளர் திருமதி றஜனி சந்திரசேகரம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

ஆசியுரையினை யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் இயக்குநர் அருட்பணி கியோ ஜெயக்குமார் அடிகளார் நிகழ்த்தவுள்ளார். (3-2)

## செப்பனிடப்பட்டு வரும் ஞானவைரவர் கோவில் வீதி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இருபாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேல் எவராலும் கவனிப்பாரற்று திருத்தப்படாத நிலையில் இருந்து வந்த இருபாலை ஞானவைரவர் கோவில் வீதி தற்பொழுது கோப்பாய் சமுர்த்தி சங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் திருத்தப்பட்டு வருகிறது.

இவ்வீதி திருத்தத்திற்கு சமுர்த்தி சங்கம் ஐந்து இலட்சம் ரூபா ஒதுக்கியமை குறிப்பிடத்தக்கது. இவ்வீதி திருத்த உதவிய கோப்பாய் பிரதேச செயலருக்கு இப்பகுதி மக்கள் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர். (6-134)

## மிதிவெடி அகற்றல் பணிகளுக்கு தடையேற்படுத்தும் கால்நடைகள்

(ஆனைக்கோட்டை)

மிருசுவில் ஜே-336 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஹலோரஸ்ற் நிறுவனத்தால் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.

இதேவேளை இப்பகுதியிலுள்ள சமூகத்தினர் வளர்க்கின்ற கால்நடைகளினால் மிதிவெடியகற்றும் பணிகளுக்கு தடை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

கடந்த வாரம் மட்டும் 8 கால் நடைகள் மதிவெடியில் சிக்கி காலை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே இப்பகுதி மக்கள் தமது கால் நடைகளைக் கட்டி வளர்த்து மிதிவெடி அகற்றும் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சொண்ட் நிறுவனத்தின் மிதிவெடி அபாயக் கல்வித் திட்டப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (6-23)

## கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையினால் 4 மாதங்களில் 42 பிணக்குகளுக்கு தீர்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையினால் கடந்த நான்கு மாதங்களில் நாற்பத்தியிரண்டு (42) பிணக்குகளுக்கு சமரசத் தீர்வு காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச மத்தியஸ்த சபையின் அமர்வுகள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிமுதல் நண்பகல் ஒருமணி வரை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இயங்கி வருகின்றது.

இதுவரையில் 150 க்கு மேற்பட்ட பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகள் சபையில் பிணக்குத் தொடர்பானவர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் காணி தொடர்பான பிணக்குகள், திருமணம், கொடுக்கல் வாங்கல் மற்றும் சிறு பிணக்குகள் தீர்க்கப்பட்ட பிரச்சினைகளில் அடங்குகின்றன.

மேலும் பிணக்குகள் தொடர்பான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் மத்தியஸ்த அமர்வு நாளான ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணிமுதல் பகல் 12 மணிக்கும் இடையில் சமர்ப்பிக்கலாமென மத்தியஸ்த சபையின் தவிசாளர் இ. மயில்வாகனம் தெரிவித்துள்ளார். (134-2)

## வலி கிழக்கு பிரதேச சபையின் புதிய வியாபார நடைமுறைகள்

### அனைவரையும் ஒத்துழைக்குமாறு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கடை உரிமையாளர், கடைக்கு முன்பக்கமாக தமது பொருட்களை வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்படுகின்றது.

தமது கடையின் உட்பகுதியிலேயே பொருட்கள் வைத்து விற்பனை செய்ய வேண்டும். வீதிப் போக்குவரத்துக்கு எச்சந்தர்ப்பத்திலும் இடைஞ்சலாக வியாபார நிறுவனம் இயங்கக்கூடாது என வலி கிழக்கு பிரதேச சபை அறிவித்துள்ளது.

அத்துடன் சந்தைப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நுகர்வுக்காக வருபவர்கள் தமது மோட்டார், துவிச்சக்கர வண்டிகளை அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டும் நிறுத்த வேண்டும் என்றும், வியாபார நிறுவன உரிமையாளர்கள் தமது வியாபார உரிம அனுமதிப்பத்திரத்தை தமது பிரதேச சபை உப அலுவலகத்தில் 31.03.2010க்கு முன்னர் செலுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அதேபோல துவிச்சக்கர உரிமம், வளர்ப்பு நாய் உரிமம் ஆகியவற்றையும் உப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளும் படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலும் வலிகிழக்கு பிரதேசசபை எல்லைக்குள் புதிதாக கட்டப்படும், புனரமைக்கப்படும் சகல வகையான கட்டிடங்களுக்கும் பிரதேச சபையின் அனுமதி பெறப்பட வேண்டும்.

மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக சபை நடவடிக்கைக்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்பை வலி கிழக்கு பிரதேச சபை செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (2-6)

## நிவாரணப் பொருட்கள் வழங்கப்படவில்லை

வலி. மேற்குப் பிரதேசத்தில் உலக உணவுத் திட்டத்தின் கீழான இலகுவேலைத் திட்டத்தின் கீழ் வேலை செய்த பயனாளிகளுக்கு கடந்த ஜனவரி,பெப்ரவரி மாதங்களுக்கான நிவாரணம் இன்னமும் வழங்கப்படவில்லை என்று பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

மார்ச் மாதத்துக்கான வேலைகள் கடந்த 5 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வரும் நிலையிலும் ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான உலருணவு நிவாரணத்தை வழங்குவதற்கு இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (6-49)

## நாயன்மார் நால்வர் எழுந்தருளல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றத்தினால் ஆலயங்கள் தோறும் நடத்தப்பட்டு வரும் பன்னிருதிருமுறை முற்றோதலில் நாளை திங்கட்கிழமை பங்குனி மாதப்பிறப்பன்று நல்லூர் ஸ்ரீமூத்த விநாயகர் ஆலயத்தில் மாலை 4 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று அழகிய சுந்தர முத்துப் பல்லக்கில் நால்வர் எழுந்தருளி காரைநகர் மருதடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தை சென்றடையவுள்ளது.

அங்கு விசேட பூசைகள், வழிபாடுகள் நடைபெற்று மன்றத்தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் பன்னிரண்டாம் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகி தொடர்ந்து தினமும் மாலை பூசையுடன் முற்றோதல் நடைபெறவுள்ளது. (6-4)

## நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

நிறுப்பதற்குப் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் கருவிகள், நகைகள் நிறுக்கும் கருவிகள் மற்றும் அவற்றுக்கான நிறுவைகள் என்பன எதிர்வரும் 17, 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அளவீட்டு அலகுகளும், நியமங்களும் சேவைகளும் திணைக்கள பரிசோதகர்களால் பரிசீலித்து முத்திரையிடப்படவுள்ளன.

எனவே இக் கருவிகள், நிறுவைகளைப் பயன்படுத்தும் வர்த்தகர்கள் குறித்த திகதிகளில் அவற்றை முத்திரையிட்டுக் கொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (ச)

## சிறுவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டம்

(யாழ்ப்பாணம்)


இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் சர்வோதய நிறுவனத்தினால் சிறுவர்களுக்கான உதவிகள், விழிப்புணர்வு செயற்திட்டங்கள் ஆகியவற்றை நாவாந்துறை, தொல்புரம், சோனகத்தெரு ஆகிய கிராமங்களில் முன்னெடுத்து வருகின்றது.

இதேவேளை இந் நிறுவனத்தினரால் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து காரைநகர் பிரதேசத்தில் மீள்குடியேறிய 40 பேருக்கு காரைநகர் பிரதேச செயலர் அனுமதியுடன் தற்காலிக வீடுகளும் அமைத்து வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-30)

## பிரதேச சம்பியனாக தெரிவு

(சாவகச்சேரி)

மட்டுவில் வளர்மதி வி. கழகத்தில் நடைபெற்ற தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கோவிலாக்கண்டி மகா விஸ்ணு வி.க. அணி தம்மை எதிர்த்தாடிய மட்டுவில் வளர்மதி வி.க. அணியை தோற்கடித்து பிரதேச சம்பியன் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (6-29)



நெல்லியடி ஹற்றன் நஷனல் வங்கியில் அசுரன்ஸ் நடவடிக்கைகள் அண்மையில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் எச்.என்.பி. அசுரன்ஸ் பொது முகாமையாளர் லலித் பெர்னாண்டோ மற்றும் எச்.என்.பி. அசுரன்ஸ் வலய முகாமையாளர் எஸ்.எம். புவிராஜ் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் வங்கியின் நிர்வாக இயக்குநர் மஞ்சுளடீசில்வா வாடிக்கையாளர் ஒருவருக்கு ஆயுள் காப்புறுதி பத்திரத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி தோற்றம் பெற்றது ஏன்?

## ஊடக அறிக்கையில் விளக்கம்



எஸ். வரதராஜன் (முதன்மைவேட்பாளர்)

கடந்த 28.02.2010 அன்று தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணியினால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு பதிலளிக்கு முகமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு (த.தே. கூ) வெளியிட்ட பதிலறிக்கை 04.03.2010 அன்று ஊடகங்களில் வெளியாகியிருந்தது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக சில கருத்துக்களை தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி முன்வைக்க விரும்புகின்றது.

இரா. சம்பந்தன், சுரேஸ் பிறேமச்சந்திரன்,மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் த.தே.கூட்டமைப்பின் தலைமைகளாக ஆரம்பத்தில் இருந்து செயற்பட்டதாக அந்த அறிக்கை கூறுகின்றது. ஆனால் 2009 மே 18ஆம் திகதிக்குப் பின்னர் இரா. சம்பந்தன் , சுரேஸ் பிறேமச்சந்திரன் , மாவை சேனாதிராஜா ஆகிய மூவரும் த.தே.கூ. உருவாக்கப்பட்ட அடிப்படைக் கொள்கையில் இருந்து அததை விலக்கி எதேச்சதிகாரமாக தமது எண்ணப்படி சகல முடிபுகளையும் மேற்கொண்டு த.தே. கூ வினை தமிழர் விரோதப் பாதையில் இழுத்துச் சென்றனர் என்பதே உண்மை.

**த.வி. புலிகளால் நிராகரிக்கப்பட்ட ஒஸ்லோ தீர்மானமும் அதை வைத்து தமிழர்களை ஏமாற்ற முயலும் த.தே.கூட்டமைப்பின் மூத்த தலைமைகளும்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைமைகளால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தைக் கஜேந்திரகுமார் ஏற்றுக்கொண்டதாகவும், இதில் உள்ளவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமானால் அதுவே பெரிய விடயம் என கஜேந்திரகுமார் தெரிவித்தாகவும் த.தே.கூ. அறிக்கை குறிப்பிட்டுகின்றது. ஆனால் கடந்த செவ்வாய்க்கிழமை (2-3.2010) திருகோணமலை மாவட்டத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் உரை நிகழ்த்திய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் சில விடயங்களை தானே ஒப்புக்கொண்டுள்ளார். அது பற்றிய செய்தி கடந்த 04.03.2010 அன்றைய தமிழ் பத்திரிகை ஒன்றில் வெளியாகியிருந்தது.

❖ அதாவது 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் ஒப்புக்கொண்டு உருவாக்கிய ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையிலான தீர்வுத்திட்டம் ஒன்றினை தயாரித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

❖ கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் இரண்டு தேசங்கள் ஒரு நாடு என்ற அடிப்படையில் தீர்வுத்திட்டம் அமைய வேண்டும் என வலியுறுத்தினார் என்றும் இந்த இடத்திலேயே கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் எழுந்தது என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்.

தெரிந்தோ தெரியாமலோ சம்பந்தன் அவர்கள் தானாகவே இத் தீர்வுத்திட்டத்தில் அடிப்படை முரண்பாடுகள் இருந்தன என்பதையும் ,அதனாலேயே கஜேந்திரகுமார் கூட்டமைப்புடன் முரண்பட வேண்டி வந்தது என்பதையும் ஒப்புக்கொண்டது குறிப்பிடத்தக்கது. இந்த இடத்தில் நாம் சில விடயங்களை வெளிப்படுத்த விரும்புகின்றோம். ஒஸ்லோ பிரகடனமானது தமிழ் மக்களின் தேசியம் , சுய நிர்ணய உரிமை , தனித்துவமான தேசம் , இறைமை ஆகிய அடிப்படை கொள்கைகளை உள்ளடக்காது தயாரிக்கப்பட்டுள்ள ஒன்றாகும். அந்த தீர்மானத்தினை விடுதலைப் புலிகள் ஆரம்பத்திலேயே நிராகரித்துவிட்டனர். அதனை நிராகரித்து அதற்குப் பதிலாக தாயகம் , தேசியம் , சுயநிர்ணய உரிமை , தனித்துவமானதேசம் , இறைமை ஆகிய அடிப்படைகளை உள்ளடக்கி இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை முன்வைத்தனர் என்பதே உண்மை.

கடந்த 6.3.2008 அன்று படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் சிவநேசன் அவர்களின் இறுதிக் கிரிகைகளுக்கு சென்றிருந்த கூட்டமைப்பின் மூத்த தலைமைகளில் ஒருவரான மாவை சேனாதிராஜா அவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்த பொழுது அவர் ஒஸ்லோ பிரகடனத்தைத் தாங்கள் நிராகரித்துள்ளதாகவும் அதனை அடிப்படையாகக் கொண்டு எந்த தீர்வு முயற்சியிலும் ஈடுபட வேண்டாம் என்றும் உறுதிப்படத் தெரிவித்ததாகவும் அதற்குப் பதிலாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் எதிர்கால அரசியற் செயற்பாடுகளை முன்னெடுப்பதையே தாம் விரும்புவதாகத் தெரிவித்தாகவும் அந்தச் சந்திப்பு முடிவடைந்த பின்னர் மாவை சேனாதிராஜா அவர்கள் பாராளுமன்றக் குழுவுக்கு தெரிவித்திருந்தார்.

ஒஸ்லோ தீர்மானம் தமிழ் தேசியத்தின் தனித்துவமான இறைமையை விட்டுக் கொடுத்து தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்பாட்டை 35 ஆண்டுகளுக்கு பின்னோக்கி கொண்டு செல்கின்றது என்ற காரணத்தினாலேயே விடுதலைப் புலிகள் அதனை நிராகரித்திருந்தனர். இந்த உண்மையை நன்கு அறிந்திருந்தும் கூட த.தே.கூவின் மூத்த தலைமைகள் மக்களை ஏமாற்றுவதற்காக விடுதலைப் புலிகள் ஏற்று உடன்பட்டுக் கொண்டதற்கமையவே (ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையிலான) இத்தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதாக பொய்யான கருத்தைப் பரப்பி வருகின்றார்கள்.

கூட்டமைப்பின் மூத்த தலைமையான இரா.சம்பந்தன் ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் தீர்வுத்திட்ட வரைபை தயாரித்துள்ளதாக கூறுவதன் மூலம் அவர்கள் கொள்கையை கைவிட்டுள்ளமை தெளிவாகியுள்ளது. இந்நிலையில் 04.03.2010 திகதிய தினக்குரல் , உதயன் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கையானது முன்னுக்குப் பின் முரணாகவும், உண்மைகளை முற்றாக மூடி மறைப்பதாகவும், தமிழ் மக்களை ஏமாற்றும் வகையிலும் அமைந்துள்ளது.

**செல்வம் அடைக்கலநாதனின் திரிசங்குநிலை**

த.தே.கூவின் மேற்படி அறிக்கையில் மூத்த தலைமைகள் என்று நாம் குறிப்பிட்ட திருவாளர்கள் , சம்பந்தன் , மாவை சுரேஸ் ஆகியோர் தவிர தலைமைத்துவத்தில் உள்ள செல்வம் அடைக்கலநாதனும் உள்ளார் எனவும் , இம் மூவர்தான் தவறான தலைமைகளாயின் த.தே.கூ வின் தலைமைத்துவத்தில் உள்ள ஐந்தாவது தலைவரான செல்வம் அடைக்கலநாதன் பதிய முன்னணியினை உருவாக்கும்போது ஏன் அழைக்கப்படவில்லை எனவும் கேட்கப்பட்டுள்ளது. த.தே.கூட்டமைப்பு கொள்கையை கைவிட்டுத் தறிகெட்டுச் செல்லும் இந்நிலையில் கொள்கை அடிப்படையில் எம்முடன் ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறு செல்வம் அடைக்கலநாதன் அவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். எமது கொள்கை நிலைப்பாட்டை முழுமையாக ஏற்றுக் கொள்வதாகக் கூறிய அவர் தனது கட்சியை சார்ந்த அம்பாறை , மட்டக்களப்பை சேர்ந்த உறுப்பினர்கள் வீட்டுச் சின்னத்திலேயே போட்டியிட விரும்புவதாகவும் மேலும் சில காரணங்களுக்காகவும் தற்போது எம்முடன் இணைந்து கொள்ள முடியாதுள்ளதாகவும் பதிலளித்திருந்தார்.



கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

**இரகசியமாகத் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டம்**

தீர்வுத்திட்ட வரைபு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசிக்கும் ஆரம்பக்கூட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டதாகவும் அதில் தமது சம்மதத்தினையும் தெரிவித்துள்ளதாகவும் த.தே.கூவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009மே 18 ற்குப் பின்னர் முதற் தடவையாக இந்திய வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர்மேனன் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் ஆகியோர் இலங்கைக்கு வருகை தந்தனர். இந்தியத்தரப்புடன் பேசப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலில் இரா. சம்பந்தன் , மாவைசேனாதிராஜா , சுரேஸ்பிறேமச்சந்திரன் , ப.கனகசபை , கஜேந்திரகுமார் ஆகியோர் பங்குபற்றினர். அந்தக் கலந்துரையாடலில் இரா. சம்பந்தன் அவர்கள் தாங்கள் தீர்வுத்திட்டம் ஒன்றை தயாரித்துள்ளதாகவும் அந்த தீர்வுத்திட்டம் பற்றி டில்லிக்கு சென்று கலந்துரையாட விரும்புவதாகவும் அதற்காக தங்களை அழைக்க வேண்டு ம் என்ற கோரிக்கையை இந்திய அதிகாரிகளிடம் தாம் முன்வைக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார். அச்சந்தர்ப்பத்திலேயே தீர்வுத்திட் ம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்ற விடயம் கஜேந்திரகுமாருக்குத் தெரிய வந்தது.

தீர்வுத் திட்டம் தயாரித்தது பற்றி தனக்கு எதுவும் தெரியாதென்றும் அதில் என்னென்ன விடயங்கள் உள்ளடங்கியுள்ளன, எந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்று எதுவும் தெரியாதென்றும் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டியிருந்தார். தீர்வுத்திட்டத்தை சர்வதேச சமூகத்தவர்களுக்கு காண்பிப்பதற்கு முன்னர் கூட்டமைப்பிலுள்ள சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருடனும் கலந்துரையாடி அவர்களது கருத்துக்கள் பெறப்படல் வேண்டும். அத்துடன் தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் கருத்துக்கள் பெறப்பட்டு அவற்றையும் உள்ளடக்கியதாக வரைபை தயாரித்த பின்னரே சர்வதேச சமூகத்தினருடன் தீர்வுத்திட்டம் பற்றி கலந்துரையாடலுக்கு செல்ல வேண்டும் என்றும் வலியுறுத்தினார். எனவே இந்திய அதிகாரிகளுடனான சந்திப்பில் தீர்வுத்திட்டம் பற்றி பேசுவதை தவிர்க்க வேண்டுமென கஜேந்திரகுமார் கோரியிருந்தார். அதற்கு கூட்டமைப்பின் மூத்த தலைமை சம்மதம் தெரிவித்திருந்தது.

**இணக்கத்திற்கு மாறாக செயற்பட்ட த.தே.கூ. இன் மூத்த தலைமைகள்**

ஆனால் ஏற்கனவே இணங்கிக் கொண்டதற்கு மாறாக சம்பந்தன், மாவைசேனாதிராஜா ,சுரேஸ் பிறேமச்சந்திரன் ஆகியோர் தன்னிச்சையாக முடிவெடுத்து இந்திய அதிகாரிகளுடனான சந்திப்பின் பொழுது தாம் தீர்வுத்திட்டம் ஒன்றினை தயாரித்துள்ளதாகவும் அந்த தீர்வுத்திட்டம் பற்றி டில்லிக்கு வந்து கலந்துரையாட விரும்புவதாகவும் அதற்காக தங்களை டில்லிக்கு அழைக்க வேண்டும் என்றும் கேட்டிருந்தனர்.

கூட்டமைப்பில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழரசுக்கட்சி ஆகிய இரண்டினதும் தலைமைகளைத் தவிர கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய தரப்புக்களுக்கு தீர்வுத்திட்டம் தொடர்பாக எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை. உண்மை இவ்வாறு இருக்க தீர்வுத்திட்டம் வரைவது பற்றிய சட்டத்தரணிகளுடனான ஆலோசனைக் கூட்டத்திற்கு ஆரம்பத்திலேயே அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் அதில் திருமதி .பத்மினி சிதம்பரநாதன் மற்றும் கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியதாகவும் கூறுவது அப்பட்டமான பொய்யாகும்.

அதன் பின்னர் 2009 யூன் மாதம் முதன் முதலாக கஜேந்திரகுமாருக்கு தீர்வுத்திட்டத்தின் ஓர் வரைபு காட்டப்பட்டது. அந்த வரைபு அடிப்படை கோட்பாடுகளுக்கு முற்றிலும் மாறாக தயாரிக்கப்பட்டிருந்தது. அடிப்படை விடயங்களை கைவிடக் கூடாது என்ற விடயம் கஜேந்திரகுமாரினால் சம்பந்தனுக்கு வலியுறுத்திக் கூறப்பட்டது. ஆலோசனைகளை உள்ளடக்கி தாம் திருத்தங்களை மேற்கொள்ளுவோம் என்று பதிலளிக்கப்பட்டது. மீண்டும் ஆகஸ்ட் மாதம் இன்னுமொரு வரைபு கஜேந்திரகுமாருக்கு காண்பிக்கப்பட்டது. அந்த வரைபும் அடிப்படை கொள்கைகளுக்கு முரணான வகையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளதா சுட்டிக் காட்டப்பட்டது. அதன் பொழுதும் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு திருத்தங்களை மேற்கொள்வதாக உறுதியளிக்கப்பட்டது. (தொடரும்)



# உலக கோடீஸ்வரர் பட்டியல்; பில்கேட்ஸை பின்தள்ளி முதலிடம் பிடித்தார் மெக்சிக்கோ தொழிலதிபர் கார்லஸ்

(நியூயோர்க்)

போர்ப்ஸ் சஞ்சிகையின் கணிப் பின்படி உலக மகாகோடீஸ்வரர் கள்(Billionaire's list)பட்டியலில் மெக்சிகோ தொழிலதிபர் கார்லஸ் ஸ்லிம் முதலிடத்தைப் பிடித்தார்.

1994ஆம் ஆண்டுக்குப்பின் அமெரிக்கர் அல்லாத ஒருவர் முத லிடத்துக்கு வந்துள்ளார். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 18.5 பில்லியன் டொலர் சொத்து அதிகரிப் புடன் 53.5 பில்லியன் அமெ.டொ லர்(6.15 லட்சம் கோடி இலங்கை ரூபாய்) சொத்துடன் முதலிடத் திலும்,

53 பில்லியன் சொத்துடன் மைக் ரோசொப்ட் நிறுவுனர் பில்கேட்ஸ் 2-ம் இடத்திலும் ,

முதலீட்டு நிறுவன ஜாம்பவான் வாரன் பப்பட் (43 பில்லியன் டொ லர்) 3-ம் இடத்திலும் உள்ளனர்.

குறைந்தது ஒரு பில்லியன் அமெரிக்க டொலருடையவரே இப் பட்டியல்படி செல்வந்தர். (ஒரு பில் லியன் அமெரிக்க டொலர் அண் ணளவாக 11 ஆயிரத்து 500 கோடி இலங்கை ரூபாய்கள்)

இந்த ஆண்டின் கோடீஸ்வரர் கள் பட்டியலை போர்ப்ஸ் சஞ்சிகை வெளியிட்டுள்ளது. இதில் இந்தியாவின் ரிலையன்ஸ் இண்டஸ்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி 29 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடன் 4-வது இடத்திலும் ,லண்டன் வாழ் இந்தி யரான ஆர்சிலர் உருக்கு ஆலை அதிபர் லட்சுமி மிட்டல் 28.7 பில்லி யன் சொத்து மதிப்புடன் 5-வது இடத்திலும் உள்ளனர்.

முதலிடத்திலுள்ள டெலிமேக்ஸ் தொலைத்தொடர்பு நிறுவன அதிபர் கார்லஸ் ஸ்லிம் அண்மையில் நியூ யோர்க் ரைம்ஸ் பங்குகளை வாங் கியதே சொத்துஉயரக் காரணம் என வும் ,பில்கேட்ஸ் மற்றும் வாரன் பப் பட் ஆகியோர்தமது சொத்துக்களை அதிகளவில் நன்கொடைகளாக வழங்கியமையும் முதலிடங்களை தவறவிடக் காரணம் எனவும் போர் ப்ஸ் சஞ்சிகையின் தலைமை அதிகாரி ஸ்ரீவ்போர்பஸ் தெரிவித்துள்ளார்.

கோடீஸ்வரர் பட்டியலில் 1011 பேர் இடம்பெற்றுள்ளனர். 234 ஆசியர் களையும் ,248 ஐரோப்பியர் களையும் கொண்ட இப் பட்டியலில் ஆசியர்களின் எண்ணிக்கை விரை வாக அதிகரித்து வருகிறது. இதில் 41இந்தியர்களும் 60 சீனர்களும் அடங்குவர்.

இப் பட்டியலில், பேஸ்புக் நிறுவுன ரான மார்கே(4 பில்.அமெ. டொலர்) இளம் வயது (25) கோடீஸ்வரராவார்.

கோடீஸ்வரர்கள் பட்டியலில் 55 நாடுகள் இடம்பிடித்துள்ளன. இதில் புதிதாக பாகிஸ்தானும் பின் லாந் தும் நுழைந்துள்ளன.

2010இல் கோடீஸ்வரர்கள் அதி கம் வசிக்கும் நகரமாக நியூயோர்கே முன்னிலையில் உள்ளது. இங்கு 60 செல்வந்தர்களும், மொஸ்கோ 50செல்வந்தர்களு டன் 2-வது இட த்திலும் லண்டன் 32 செல்வந்தர்க ளுடன் 3-வது இடத்திலும் உள்ளன.

2009இல் 793 ஆக இருந்த செல்வந்தர்களின் எண்ணிக்கை 2010இல் ஆயிரத்து 11 ஆக உயர்ந்துள்ளது.

உலகின் முன்னணி கோடீஸ் வரர்கள் வரிசையாய்,

## #1 கார்லஸ் ஸ்லிம்



70 வயதான மெக்சிக்கரான இவரது சொத்து மதிப்பு 53.5 பில். அமெ.டொலர். **தொழில்:** தொலைத் தொடர்புத்துறை, **வளர்ச்சி:** சுய முன் னேற்றம், **கல்வி:** பட்டதாரி.

கட்டுமானத்துறை, நிதித்துறை என 200இற்கும் மேற்பட்ட தொழில் கள் இவரது கட்டுப்பாட்டில் உள்ளது. மெக்சிக்கோ பொருளாதாரத்தை தீர்மானிப்பவராகவும் உள்ளார்.

## #2 பில் கேட்ஸ்



54 வயதான அமெரிக்கரான இவ ரது சொத்து மதிப்பு 53.0 பில். அமெ. டொலர். **தொழில்:** மைக்ரோசொப்ட், **வளர்ச்சி:** சுயமுன்னேற்றம், **கல்வி:** பட்டப்படிப்பு இடைநிறுத்தம்.

மென்பொருள் வடிவமைப்பா ளரான இவர், தற்போது மைக்ரோ சொப்டின் பணிகளில் இருந்து ஒதுங்கி கேட்ஸ்-மிலின்டா பவுண்டே சனூடாக வறுமை ஒழிப்பு, கல்வி, மலேரியா தடுப்பு ,எயிட்ஸ் கட்டுப்பாடு போன்றவற்றில் ஈடுபட்டு வருகிறார்.

## #3 வாரன் பப்பட்

79 வயதான அமெரிக்கரான இவரது சொத்து மதிப்பு 47.0 பில். அமெ.டொலர். **தொழில்:** பெர்சயர் ஹாத்வே முத லீட்டு நிறுவனம், **வளர்ச்சி:** சுயமுன்னேற்றம், **கல்வி:** பட்டதாரி.



அமெரிக்காவின் முதலீட்டுக் குரு என அழைக்கப்படுபவர். இவர் பங்கு வாங்க உலக நிறுவனங்கள் காத்துக்கிடக்கின்றன. இவர் அண்மை யில் தனது சொத்தின் 85 வீதத்தை கேட்ஸ்-மிலின்டா பவுண்டேசனு க்கு அளிக்க உறுதியளித்துள்ளார்.

## #4 முகேஷ் அம்பானி



52வயதானஇந் தியரான இவரது சொத்துமதிப்பு29.0 பில். அமெ.டொலர். **தொழில்:** பெட்ரோ கெமிக்கல்; ஓயில், **வளர்ச்சி:** பிறப்பால்; சுயமுன்னேற்றம், **கல்வி:** பட்டதாரி.

இந்தியாவில் வலிமைமிக்க நிறு வனமான ரிலைன்ஸ் இண்டஸ்ரீ ஸின் தலைவர். திருபாய் அம்பானி யின் மறைவின் பின் தொழில்கள் பிரிக்கப்பட்டபோது ,இவர் வசம் வந்த தொழில்களை திறம்பட நடத்துபவர். மும்பை இந்தியன்ஸ் அணி உரி மையாளர்.

## #5 லட்சுமி மிட்டல்



59 வயதான இந்தியரும் லண்ட னில் வசிப்பவருமா ன இவரது சொத்து மதிப்பு 28.7 பில். அமெ. டொலர். **தொழில்:** இரும்பு உருக்கு, **வளர்ச்சி:** பிறப்பால், சுயமுன்னேற்றம், **கல்வி:** பட்டதாரி.

உலகில் மிகப்பெரிய உருக்குத் தொழில் சக்கரவர்த்தியான இவர் , 70களில் குடும்பத்தொழிலான இத் தொழிலில் நுழைந்தார். படிப்படி யாக தனது தொழிலை இந்தோ னேசியா ,கிழக்கு ஐரோப்பா என விஸ்தரித்தார். நட்டத்தில் இயங்கும் அல்லது கைவிடப்பட்ட உருக்கு ஆலைகளை வாங்கும் இவர், பின்னர் அவற்றை இலாபம் தரக் கூடிய வகையில் மாற்றும் திறன் படைத்தவர்.

## #6 லோறன்ஸ் எலிசன்




65 வயதான அமெரிக்கரான இவரது சொத்து மதிப்பு 28.0 பில். அமெ.டொலர். **தொழில்:** ஒராகிள், **வளர்ச்சி:** சுயமுன்னேற்றம், **கல்வி:** பட்டப்படிப்பு இடைநிறுத்தம்.

ஒராகிள் நிறுவுனர். ஒராகிள் எனப் படும் தரவுத்தள வடிவமைப்பா ளர். இவர் கடந்த 5 ஆண்டுகளில் 57 நிறுவனங்களை வாங்கியுள் ளார். சிக்காகோ பல்கலைக் கழகத் தில் பட்டப்படிப்பை முடிக்க முன்னரே 1977இல் ஒராகிள் நிறுவனத்தை தொடங்கியவர்.

## #7 பேர்னாட் ஆர்னல்ட்



68 வயதா ன இந்த பிரஞ்சுக்கார ரின் சொத்து மதிப்பு 27.5 பில்.அமெ.டொலர். **தொழில்:** அங் காடி வணிகம், **வளர்ச்சி:** பிறப்பால் மற்றும் வளர்ச்சி, **கல்வி:** பட்டதாரி.

LVMH என்ற ஆடம்பர பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இவர், பஷன்துறை மற்றும் கட்டுமானத் துறையில் உள்ளார். தற்போது இத் தொழில்களில் தனது பிள்ளை களையும் ஈடுபடுத்தியுள்ளார். அத் துடன் ஒரு சிறந்த பியானோக் கலைஞருமாவார்.

## #8 எக் பற்ரிஸ்ரா



53 வயதான இந்த பிரேஸில் காரரின் சொத்து மதிப்பு 27.0பில். அமெ.டொலர். **தொழில்:** சுரங்கம் மற்றும் எண்ணெய், **வளர்ச்சி:** சுய முன் னேற்றம், **கல்வி:** பல்கலைக் கழகக் கல்வியை இடையில் நிறுத்தியமை.

முன்னாள் சுரங்க அமைச் சரின் மகனான இவர், தனது தொழி லுக்கு தந்தை உதவவில்லை என வும் ,தான் பூச்சியத்தில் இருந்தே ஆரம்பித்ததாகவும் தெரிவிக்கிறார் வளர்ந்து வரும் இந்த பிரேஸில் தொழி லதிபர். சுரங்கத் தொழில், எண்ணெய் அகழ்வு மற்றும் கப்பல் கட்டுமானம் எனப் பல துறைகளில் கால் பதித் துள்ளார். 2016இல் ரியோ டி ஜெனி ரோவில் ஒலிம்பிக் நடப்பதற்கு நட ந்த வாக்கெடுப்பில் வெற்றி பெற பெருமளவில் நிதியுதவி செய்தவர்.

## #9 அமான்ஷியோ ஒரேகா

74 வயதான இந்த ஸ்பெயின் காரரின் சொத்து மதி ப்பு 25.0 பில். அமெ. டொலர். **தொழில்:** பஷன் பொருள் உற்பத்தி ,**வளர்ச்சி:** சுய முன்னேற்றம், **கல்வி:** குறிப் பிடும்படியில்லை. சாரா உட்பட பல பெயர்களில்வர்த் தகப்படுத் தும் பஷன்துறை பொருள் வர்த்தகத தில் ஈடுபடும் இவரது நிறுவனம் 73 நாடுகளில் 4 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான அங்காடி களுடன் இயங்கிவருகிறது.



## #10 கார்ல் அல்பேர்ட்



90 வயதான, ஜேர்மனியைச் சேர்ந்த இவரது சொத்து மதிப்பு 23.5 பில். அமெ.டொலர். **தொழில்:** அல்டி ஷட் சுப்பர் மார்கட், **வளர்ச்சி:** சுயமுன்னேற்றம், **கல்வி:** குறிப் பிடும்படியில்லை. ஜேர்மனி உட்பட ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் ஆயிரக் கணக்கான அல்டி என்ற பெயரில் பல்பொருள் அங்காடி களை நடத்திவருகிறார்.




# ஈகிள் காப்புறுதி நிறுவனம் அவிவா என்.டி.பியாக மாறியது

ஈகிள்காப்புறுதிநிறுவனம் அவிவா என்டிபி(AVIVA NDB) காப்புறுதி யாக மாற்றமடைந்துள்ளது. இது குறித்து முகாமைத்துவப் பணிப் பாளர் சூரியாராச்சி கூறுகையில், உலகளாவிய நிணத்துவ அனுபவத் தைக் கொண்ட அவிவாவும், என்.டி. பியின் நிதிவளமும் காப்புறுதித் துறையில் முக்கிய நடவடிக்கைக்கு ஏதுவாக இருப்பதோடு, வாடிக் கையா ளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கும் உதவுகிறது என் றார். அவர் மேலும் தெரிவிக்கை யில், உலகளாவிய காப்புறுதி நிறு வனமாகத் திகழும் அவிவா, 5 கோடிக்கும் அதிகமான வாடிக் கையாளர்களுக்கு 28 நாடுகளில் சேவையாற்றுகிறது என்றார்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.27 | 114.86 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 169.96 | 173.47 |
| யூரோ (ஐரோ. ஒன்றியம்) | 154.20 | 157.87 |
| சுவிஸ் பிராங் | 105.08 | 108.39 |
| கனேடிய டொலர் | 109.60 | 113.20 |
| அவுஸ்திரேலிய டொலர் | 102.78 | 105.86 |
| சிங்கப்பூர் டொலர் | 80.67 | 82.59 |
| ஜப்பான் யென் | 1.24 | 1.27 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.51 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.04 | |

# பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 3844.84 | 12.54 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4432.80 | 4.74 |
| புரள்வு (ரூபா. மில்லியன்) | 2870.37 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : சிறிலங்கா ரெலிகொம், சிலோன் ரொபா க்கோ ,என்வெயர்மென்டல் றிசோசஸ் ,ஜோன் கீல்ஸ், ஹேறாலீஸ்.

***சரிவைக் காட்டிய பங்குகள்***: டயலொக் ரெலிகொம், சன்சைன் , எச்.என்.பி., என்.டி.பி., ஆஸிரி ஹொஸ்பிட்டல்.

# பிராந்திய பொருளாதார அபிவிருத்தியின் மையமாக இலங்கை-து.அதிகாரசபை தலைவர்

(ஜகர்த்தா)

யுத்தம் முடிபடைந்ததைத் தொடர் ந்து தெற்காசியாவில் துரித பொரு ளாதார உயர்வினை அடையும் நா டாக இலங்கை மாறிக்கொண்டி ருப்பதோடு ,பிராந்திய பொருளா தார அபிவிருத்தியின் உறுதிமிகு மத்திய நிலையமொன்றாகவும் மாற்றமடைந்துள்ளதென இலங் கை துறைமுக அதிகாரசபை த் தலைவர் Dr. பிரியத்பந்து விக்கிரம தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவில் ஆசிய மற்றும் ஓசானிய வலய கரத்தரங்கு மற்றும் துறைமுக சம்மேளனத்தின் 10-வது மாநாடு நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட துறைமுக அதிகாரசபைத் தலைவர் Dr. பிரியத்பந்து விக்கிரம மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தற்போது சிறப்பான பொருளாதார அபிவிருத்தியை நோக்கிச் செல்லும் ஆசியாவின் சிற ந்த பொருளாதார பலம் கொண்ட நாடாக மாறிக் கொண்டிருக்கிறது. அதற்கு துறைமுகங்கள் சார்பாக பெரும் பங்களிப்பு வழங்கப்படு கின்றது. 2010ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தின் கொள் கலன் கையாளல் அளவை4 மில் லியன்வரை அதிகரிப்பதற்குத் திட் டமிடப்பட்டுள்ளதுடன் .அது கடந்த 2 மாதங்களினுள் 20சதவீதத் தினால் அதிகரித் துள்ளது.

தற்போது நவீனமுனையச் செயற்பாட்டு வலையமைப்பினை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக் கப்படுகிறது. கொழும்பு தெற்கு துறைமுகம் 3 முனையங்களை உள்ளடக்குவதுடன்தடுப்புச் சுவர் , மேலதிக முனையச் செயற் பாடுகளும் செயற்படுத்தப்படும் எனறார்.

கு.முருகதாஸ்

மாமி பெரியவள். மருமகளும் பெரியவள். பானை பொங்குகிறது. யார் பானையை கீழே இறக்கிவைப்பது? ~இந்தியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## எலியால் குழம்பிப்போன பூனையின் நடன அரங்கேற்றம்

செல்வந்தர் ஒருவர் தான் செல்லமாக வளர்த்த பூனைக்கு நடனம் பயிற்றுவித்தார். பல ஆயிரம் ரூபாய்களை செலவு செய்து பூனைக்கான நடனப்பயிற்சி வழங்கப்பட்டது.

யானைகள் நடனமாடுவது போல பூனைகளும் நடனம் ஆடலாம் என்பதை அந்த செல்வந்தர் நிரூபித்தார்.

தனது பூனை நடனம் கற்றுக்கொண்டமை செல்வந்தருக்கு தாளாத மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

அதனால் பூனையின் நடன அரங்கேற்றத்தை நடத்த முடிபு செய்தார். அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன. குறித்த நாளில் மிகப்பெரிய மண்டபத்தில் பூனையின் அரங்கேற்றம்.

முக்கிய பிரமுகர்களால் மண்டபம் நிறைந்திருந்தது.

பக்கவாத்திய சகிதம் பாடலிசைக்க, பூனையின் நடன அரங்கேற்றம் ஆரம்பமாகியது.

பூனையின் நடன அசைவு அபாரம். சபையில் இருந்தோர் பிரமித்தனர்.

அடேங்கப்பா! ஒரு பூனை இப்படியெல்லாம் நடனம் ஆடுகின்றதே என்று புளகாங்கிதம் அடைந்தனர். பூனையின் நடனம் உச்சமாகியிருந்தபோது மண்டபத்தின் கூரையில் ஓடித்திரிந்த எலி ஒன்று தவறுதலாக அரங்கில் விழுந்தது.

எலி விழுந்ததுதான் தாமதம். நடனம் ஆடிக்கொண்டிருந்த பூனை நடனத்தை மறந்து பாய்தடித்து எலியைப் பிடித்து கௌவிக் கொண்டு அரங்கை விட்டு ஓடியது.

இதைக் கண்ட பூனையின் எஜமான் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

எவ்வளவோ சிரமங்களைத் தாங்கி, பூனைக்கு நடனம் பழக்கி, அரங்கேற்றம் செய்ய பூனை கடைசி நேரத்தில் இப்படி காலை வாரிவிட்டதே என்று எஜமான் வேதனை கொண்டார்.

அவரின் கவலையைப் புரிந்து கொண்ட ஒரு பெரியவர், எஜமானுக்கு ஆறுதல் வார்த்தை கூறினார்.

நீங்கள் எவ்வளவுதான் நடனம் பழக்கினாலும் பூனை தன்னுடைய அடிப்படைக் குணத்தை ஒரு போதும் கைவிடாது.

இது எல்லா உயிர்களுக்கும் பொருந்தும். இது தொடர்பில் நீங்கள் கவலை கொள்வது அர்த்தமற்றது.

அந்தந்த சந்தர்ப்பங்களில் அவரவர் தத்தம் இயல்பைக் காட்டவே செய்வர் என்று அந்தப் பெரியவர் கூற பூனையின் எஜமான் ஒருவாறு கண்ணீரை கட்டுப்படுத்திக் கொண்டார்.

பூனையின் இந்தக் கதை இப்போது எதற்கு என்று நீங்கள் கேட்டால் நேற்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை சார்ந்த மாணவர்கள் மக்கள் நாடாளுமன்றம் ஒன்றை ஏற்பாடு செய்து தேர்தலில் போட்டியிடும் தமிழ் அரசியல் கட்சிகளை ஒரே மேடையில் சந்திக்க ஒழுங்கு செய்தனர். நல்ல முயற்சி எனினும் என்ன செய்வது?

பூனைக்கு நடனம் பழக்கிய அந்தப் புண்ணியவானுக்கு ஏற்பட்டகதிதான் சட்டத்துறை மாணவர்களுக்கும் ஏற்பட்டது.

அட! ஒற்றுமைப்படாத எங்கள் இனத்தை ஒரே மேடையில் ஒன்றாக காண நினைத்தது உங்கள் தவறு தம்பிகாள்.

பூனையின் எஜமானைப் போல தேறிக்கொள்ளுங்கள். அவ்வளவுதான்.

# கிறிஸ்மஸ் தீவில் இருந்து தமிழர்களை திருப்பியனுப்ப அவுஸ்திரேலியா தீர்மானம்

(கொழும்பு)

அவுஸ்திரேலிய கிறிஸ்மஸ் தீவில் இருந்து இலங்கை தமிழர்களை இலங்கைக்கே நாடுகடத்தும் நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இதன் அடிப்படையில் 3தமிழர்களை கிறிஸ்மஸ் தீவில் இருந்து இலங்கைக்கு அனுப்ப அவுஸ்திரேலிய அரசாங்கம் தற்போது நடவடிக்கைகளை எடுத்து வருவதாக குடிவரவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் .

கிறிஸ்மஸ் தீவில் தொடர்ந் தும் அகதிகளை வைத்திருப்பதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோத குடியேறிகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்தே அவுஸ்ரேலியா இந்த முடிவை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை இலங்கை மற்றும் ஆப்கான் அகதிகளுக்கான சர்வதேச பாதுகாப்பு வழிகாட்டி தொடர்பாக மீள ஆராயப்போவதாக தெரிவித்துள்ள நிலையிலேயே அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் இந்த முடிவு வெளியாகியுள்ளது.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்துள்ளமையும் ஆப்கானிஸ்தானில் நிலமை சீரடைந்து வருகின்றமையுமே ஐக்கிய நாடுகள் சபையின் முடிவுக்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது .

அவுஸ்திரேலிய கிறிஸ்மஸ்தீவில் தற்போது ஆயிரத்து 872 அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நிலையில் அண்மையில் அவுஸ்திரேலியாவுக்குள் வரும் அகதிகளின் தகவல் படி மேலும் பலர் அவுஸ்திரேலியாவுக்குள் வர முயற்சித்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# ஈழவாதிகளின் வாக்குகளால் தீர்மானிக்கப்படும் நாடாளுமன்றமொன்றை உருவாக்கக்கூடாது

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஈழவாத கோரிக்கைகளை உடையவர்களின் வாக்குகளினால் தீர்மானிக்கப்படக்கூடிய நாடாளுமன்றமொன்றை உருவாக்கக் கூடாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து சுகததாச மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டபோது அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது,

நாட்டு மக்களுக்கு சேவையாற்றக்கூடிய வலுவான நாடாளுமன்றம் ஒன்றை அமைப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டார் மற்றும் மஹிந்த சிந்தனைக் கொள்கைத் திட்டத்தை முன்னெடுத்தால் ஆசியாவின் மிகப் பெருமைக்குரிய நாடாக இலங்கையை உருவாக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கட்சிகள் டொலர் கட்டுகளுக்கு சோரம் போன காலத்தில் உழைக்கும் மக்கள் தமது ஆட்சிக்கு ஆதரவளித்ததாகவும் பத்தாயிரம் ரூபா சம்பளம் வழங்குவதாக எதிர்க்கட்சிகள் வழங்கிய போலி வாக்குறுதி மீது நம்பிக்கை கொள்ளாது அரசாங்கத்தின் 25 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்விற்கு மதிப்பளித்து ஜனாதிபதித்தேர்தலில் வாக்களித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையை இலங்கையாகவே அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் முதன்மை நோக்கம் எனவும் ஓர் காலனித்துவ ஆட்சிய்ய அமைப்பது உசிதமாகாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளதுடன் ஊழல் மோசடியற்ற ஓர் நாடாளுமன்றத்தை உருவாக்க அர்ப்பணிப்புடன் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-6)

## நல்லூர் பிரதேச பிரிவுக்கான பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய அங்கத்துவ அட்டைகளை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்பிரதேச பிரிவுக்குட்பட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்க அங்கத்தவர்களுக்கான அங்கத்துவ அட்டைகள் மேலும் ஒரு தொகுதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் ஏற்கனவே அங்கத்துவ விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கத்துவ அட்டைகள் பெற்றுக் கொள்ளாதவர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை அல்லது எதிர்வரும் 28ம்திகதி மு.ப.9 மணிமுதல் ந.ப. 12மணி வரையில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தம்மிடம் பெற்றுக் கொள்ளலாமென சங்கத்தின் செயலாளர் செ.சந்திரசேகரம் தெரிவிக்கின்றார்.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இச்சங்கத்தில் இணைந்து கொள்ளாதவர்கள் ஒவ்வொரு மாதமும் 2வது, 4வது ஞாயிற்றுக்கிழமைகளில் அங்கத்துவ விண்ணப்பங்களைப் பெற்று சமர்ப்பிக்கலாம் எனவும் மேலும் ஓர் அங்கத்தவர் மரணமடையும் சந்தர்ப்பத்தில் சாதாரண மரண சகாய நிதித் திட்டமூலம் ரூபா 6ஆயிரம் வரையிலும் , விசேடமரண சகாயநிதித் திட்டமூலம் ரூபா 25 ஆயிரம் முதல் 50ஆயிரம் வரையிலும் வழங்கப்படுகின்றது என்றும் அங்கத்தவர்களாக இணைந்தவர்கள் விசேட மரண சகாய நிதித் திட்டத்தில் சேர்ந்து பயன்பெற தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொள்கின்றார். (2-6)

# மாற்றத்தின் அடையாளம்-ஒப்புரவு

ஒருவன் தனது துன்பத்தை நீக்கி இனித் துன்பம் வராதபடி முன்னதாகவே காக்கவல்ல தன்மையுடையவரைப் போற்றி அவனிடத்தில் நட்புக் கொள்ளவேண்டும்.


ஆம், குட்டையில் விழுந்து எழுந்தவன் மீண்டும் குட்டையில் விழாமல் காத்துக்கொள்வான். நெருப்பில் சுட்டுக் கொண்டவன் மீண்டும் நெருப்பு சுடாமல் பார்த்துக்கொள்வான். அதுபோல குற்றமும் பாவமும் செய்தவன் மீண்டும் அதைச் செய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

இதைவிட சற்றுமேலாக பசுவை விட்டுச்சென்ற கன்று மீண்டும் பசுவை அடைந்தால்தான் அதற்கு பாதுகாப்பு ; தாயை மறந்து சென்ற சேய் மீண்டும் தாயை அடைந்தால் தான் அதற்குப் பாதுகாப்பு; அதுபோல பரமனை விட்டுச் சென்ற பக்தன் மீண்டும் பரமனை அடைந்தால் தான் அவனுக்குப் பாதுகாப்பு.

## பரமபிதா காட்டிய பாதை

இதைத்தான் இன்றைய நற்செய்தி வாசகம் மையப்படுத்துகின்றது. இன்று நாம் தவக்காலத்தின் 4ஆம் ஞாயிறைக்கொண்டாடுகிறோம். இன்றைய நற்செய்தி ஊதாரி மைந்தன் உவமையை நமக்குப் படம் பிடித்து காட்டுகிறது.

ஊதாரி மைந்தன் (இளையவன்) இவன் இளமை முறுக்கினால் தந்தையுடன் சண்டைபோட்டுக் கொண்டு சொத்தைப் பிரிக்கச் சொல்லி அதோடு தந்தையின் உறவையும் முறித் துக் கொண்டு செல்கின்றான் சென்றவன் இந்த உலகமே சதம். இன்பமே நிதம் என்று உல்லாசமாகச் செலவழிக்கிறான் . இது அவனுடைய அறியாமை. அறியாமையே எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் என்று தத்துவங்கள் கூறுகின்றன. ஆம். இந்த உலகம் நிலையானதல்ல; இந்தச் சிற்றின்பங்கள் நிரந்தரமானவையல்ல என்று உணராத அவன் தான் தோன்றித்தனமாக வாழ்கின்றான். ஆனால் அங்கு வந்தது ஒரு பெரிய சோதனை . எங்கும் பஞ்சம்; வயிறு நிரப்பதவிடுகூட கிடைக்கவில்லை. கூட இருந்த நண்பர்களும் பணம் கரைந்து விட்டதும் காக்கை போல பறந்து விட்டார்கள். அப்போது தான் அவன் தன் நிலையை அறிந்தான். இந்த உலகத்தின் நிலையாமையை உணர்ந்தான். இங்கு தந்தையின் அன்பை பார்க்குமிடத்து தன் சொத்தையெல்லாம் பிரித்து தன் உறவை எல்லாம் உதறிச் சென்றாலும் அவன் என் மகனே என்னும் பந்தத்தில் பற்றி எரியும் தந்தையாய் அவன் தந்தை விளங்குகிறார். தன் மகன் திரும்பி வருவான் என்று உண்ணாமலும் உறங்காமலும் காத்திருக் கின்றார்.




பின் தன் மகன் வருவதை தூரத்தில் இருந்து பார்த்தவுடனே ஓடிச் சென்று அன்பொழுக அள்ளி அரவணைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றார். இங்குதான் அவரின் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. இது தான் இறைவனின் அன்பு. இன்று நம் இறைவனும் தந்தையாக இருந்து நம்மை வா என்று அள்ளி அரவ ணைக்க இரு கரம் விரித்து காத்துக் கொண்டே இருக்கிறார்.

ஆம் . தவறு செய்வது மனித இயல்பு தவறைத் திருத்தி வாழ்வது புனிதப் பண்பு. இறை அன்பு அளவிட முடியாதது இந்த அன்பில் நிலை பெற்று இந்த தவக்காலத்தில் நம் பாவ வாழ்வைவிட்டு இறை அன்பில் ஒப்புரவாகி ஒன்றாவோம்

ஜோன் ரொபேர்

# எம்.எல்.ஏ.க்கள் நடிப்பில் என்னை மிஞ்சிவிட்டார்கள் –நடிகர் சிரஞ்சீவி



ஆந்திர சட்டசபை கூட்டத்தொடர் தற்போது நடந்து வருகிறது.

2 நாட்களுக்கு முன்பு சட்டசபையில் தெலுங்கு தேசம் கட்சி தலைவர் சந்திரபாபுநாயுடு பேசும்போது நான் கர்னூல் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் பார்த்த போது மிகவும் வேதனை அடைந்தேன். அவர்களுக்கு அரசின் எந்தவித உதவியும் கிடைக்கவில்லை. அவர்களின் வாழ்க்கையை நினைத்தால் எனக்கு அழுகைதான் வருகிறது என்று கூறி கண் கலங்கினார்.

இதைப்பார்த்ததும் தெலுங்கு தேசம் கட்சியின் வேறு சில எம்.எல்.ஏ.க்களும் விவசாயிகளின் நிலையை நினைத்து வேதனை அடைவதாக கூறி போட்டி போட்டு கண் கலங்கினார்கள்.

இதுபற்றி சிரஞ்சீவி என்னால் சினிமாவில் தான் நன்றாக நடிக்க முடியும். நிஜத்தில் என்னால் நடிக்க முடியாது. ஆனால் ஆந்திர சட்ட சபையில் கடந்த சில நாட்களாக பேசிய எம்.எல்.ஏ.க்களின் நடிப்பைப் பார்த்து பிரமித்துப் போய்விட்டேன்.

ஏழைகளை நினைத்து வேதனைப்படுவதாகக் கூறி அவர்கள் கண்ணீர் விட்டு நடித்தது அபாரமாக இருந்தது. அவர்களது நடிப்புக்கு சிறந்த நடிகர் விருது கூட தரலாம் என்றார். உடனே அவரிடம் நிருபர்கள், குறுக்கிட்டு, என்.டி.ராமராவ் கூட தன்னைவிட மருமகன் சந்திரபாபுநாயுடு அபாரமாக நடிப்பதாக கூறி இருந்தார்.

அதே போல்தான் நீங்கள் சொல்கிறீர்களா? என்று கேட்டனர். இதற்கு சிரஞ்சீவி, நான் யாரையும் குறிப்பிட்டு சொல்ல விரும்பவில்லை. பொதுவாகத்தான் சொன்னேன்.

எம்.எல்.ஏ.க்களின் நடிப்பை பார்த்த பிறகுதான் எனக்கு ஒரு உண்மை புரிந்தது. அரசியலைப் பொறுத்த வரையில் நாம் மக்களிடம் நடிக்கத் தெரிந்தால்தான் வெற்றி பெற முடியும். அங்கு நாம் உண்மையான தலைவராக நடந்து கொண்டால் தோல்வி தான் கிடைக்கும் என்றார். (2-6)



இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்துள்ள ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின் காங்கிரஸ், தலைவர் சோனியாவை சந்தித்து பேசினார்

# கொச்சிநகரின் மீது தீவிரவாதிகள் வெறிப்பார்வை திரும்பியுள்ளது

## இந்திய உளவுத்துறை எச்சரிக்கை

இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களில் பயங்கர தாக்குதல் நடத்த பாகிஸ்தானில் செயல்படும் லஷ்கர் –இ-தொய்பா இயக்கம் சதி திட்டம் தீட்டியுள்ளது. பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ நிழல் உலக தாதா தாவூத் இப்ராகிம் மற்றும் இந்தியன் முஜாகிதீன் தீவிரவாதிகளுடன் இணைந்து இந்த நாச வேலையை செய்ய அவர்கள் தீவிரமாகி உள்ளதாக செய்தித் தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

பெங்களூர், மும்பை, டெல்லி நகரங்களையே பாகிஸ்தான் தீவிரவாதிகள் மீண்டும் குறி வைத்து இருப்பதாக சில தினங்களுக்கு முன்பு உளவுத்துறை எச்சரித்திருந்தது. இந்த நிலையில் தேசிய புலனாய்வுக்குழு அமெரிக்காவில் பிடிபட்ட ஹெட்லி, ராணாவிடம் விசாரணை நடத்தி தகவல்களை திரட்டியது.

அப்போது லஷ்கர் –இ-தொய்பா தீவிரவாதிகள் கேரளாவில் உள்ள கொச்சி நகருக்கு தங்கள் வெறிப்பார்வையைத் திருப்பி இருப்பது தெரிய வந்தது. பாகிஸ்தான் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் காலை சில தகவல்கள் போனில் பரிமாறிக் கொண்டதை உளவுத்துறை ஒட்டுக் கேட்டது. அப்போது கொச்சி பற்றி அவர்கள் பேசினார்கள். இதன் மூலம் கொச்சிக்கு உள்ள ஆபத்து உறுதியானது. (2-6)

# இராணுவத்தில் ஆண்களுக்கு சமமாக பெண்களுக்கும் உரிமைகள் வேண்டும்

## டெல்லி நீதிமன்றம் தீர்ப்பு

(புதுடெல்லி)


இராணுவத்தில் ஆண்களைப்போல பெண்களுக்கும் பணி செய்ய உரிமை வழங்க வேண்டும் என்று டெல்லி மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இராணுவத்தில் பணியாற்றும் பெண்கள் மற்றும் பணியில் இருந்து விடுவிக்கப்பட்ட பெண்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் இராணுவத்தில் 14 ஆண்டுகளுக்கு மேல் பெண்கள் பணியாற்ற உரிமை இல்லை என்ற விதிமுறையை மாற்றி ஆண்களைப் போல் பெண்களுக்கும் நிரந்தரமாக பணியாற்ற உரி\u0001ம வழங்க வேண்டும் என கூறப்பட்டு இருந்தது.

இந்த மனு மீதான விசாரணை டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி சஞ்சய் கிஷன் காவுல் தலைமையிலான அமர்வு முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி இராணுவத்தில் ஆண்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சலுகைகள் மற்றும் உரிமைகளை பெண்களுக்கும் வழங்க மத்திய அரசு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் இராணுவத்தில் பெண்கள் 14 ஆண்டுகள் மட்டுமே பணியாற்ற வேண்டும் என்ற விதிமுறையை மாற்றி ஆண்களைப் போல பெண்களும் நிரந்தரமாக பணியாற்றும் உரிமையை வழங்க வேண்டும் என்று தீர்ப்பு கூறினார். (2-6)



பாகிஸ்தான் கடற்படை அரபிக்கடலில் உள்ள இலக்கை குறி வைத்து ஏவுகணை சோதனை நடத்தியது. எதிரி நாடுகளுக்கு எச்சரிக்கை என, இந்தியாவின் பெயரை குறிப்பிடாமல் மறைமுகமாக, மார் தட்டிக்கொண்டது பாகிஸ்தான்.

# பாகிஸ்தானில் தொடரும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்

## பலர் உடல் சிதறிப் பலி



பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் அடுத்தடுத்து தற்கொலை தாக்குதலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

நேற்று முன்தினம் லாகூரில் 4 இடங்களில் குண்டு வெடித்தது. மதியம் 2 இடங்களிலும் இரவு மேலும் 4 இடங்களிலும் குண்டுகள் வெடித்தன.

இதில் 45 பேர் பலியானார்கள். இராணுவ வீரர்கள் உட்பட 100க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர்.

இதற்கிடையே நேற்று காலையிலும் குண்டு வெடித்தது.

ஸ்வாத் பள்ளத்துக்கு பகுதியில் தற்கொலை படை தீவிரவாதிகள் வெடிகுண்டு தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் 10 பேர் உடல் சிதறி பலியானார்கள்.

காரில் வந்த தற்கொலை படை தீவிர வாதிகள் சோதனைசாவடியில் மோதினார்கள். இதில் 5 கார்கள் தீப்பிடித்து எரிந்தன. சோதனை சாவடியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் பாதுகாப்பு பணியில் இருந்தனர். குண்டு வெடிப்பில் இராணுவ வீரர்கள் உட்பட 10 பேர் பலியானார்கள். (2-6)

# 101 வயது பாட்டிக்கு நெற்றியில் கொம்பு

(பீஜிங்)

சீனாவில் உள்ள ஹெனான் மாநிலத்தை சேர்ந்தவர் ஜாங்க் ரூய்பாங்க். இவருக்கு 101 வயது ஆகிறது. கடந்த ஆண்டு இவர் நெற்றியில் ஒரு கொம்பு முளைத்தது. இப்போது அதன் நீளம் 6 செ.மீ ஆக உள்ளது. இப்போது நெற்றியின் இன்னொரு பாகத்திலும் ஒரு கொம்பு முளைத்து இருக்கிறது. இந்த கொம்பு காரணமாக எந்த வேதனையும் கிடையாது என்கிறார் ரூய்பாங்க்.

அவரது 60 வயது மகன் ஜாங்க் குவோஷெங் கூறுகையில்,

முதலில் நாங்கள் இது குறித்து அதிகம் கவனம் செலுத்தவில்லை. ஆனால் காலம் செல்ல செல்ல, இந்த சதைக்கட்டி வளர்ந்து கொண்டே போகத் தொடங்கியது. இப்போது இன்னொரு பக்கத்திலும் கொம்பு முளைத்து வருகிறது என்று குறிப்பிட்டார்.

ரூய்பாங்க்குக்கு 7 குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தி மட்டும் தான் மகள்.

மற்றவர்கள் அனைவரும் மகன்கள். அவரது மூத்த மகனுக்கு 82 வயது ஆகிறது. ஆஸ்பத்திரிக்கு சென்று சிகிச்சை பெறுவதற்கு அந்த குடும்பத்திடம் பணவசதி இல்லை என்று கூறப்படுகிறது. (ஓ-6)

# ரஷ்ய உதவியுடன் இந்தியாவில் 12 அணு உலைகள் நிறுவத்திட்டம்

இந்தியாவில் குறைந்தது 12 அணு உலைகளை ரஷ்யா நிர்மாணிக்கவுள்ளதாக அந்நாட்டுக்குச் சொந்தமான அணுசக்தி நிறுவனமான ரொசாட்டம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இரண்டு நாடுகளுக்கு இடையிலான பங்களிப்பின் முக்கியமான அம்சங்களில் இந்த அணுசக்தி ஒத்துழைப்பும் ஒன்று என அவர் விபரித்துள்ளார்.

ரஷ்யாவின் இரண்டு அணு உலைகள் ஏற்கனவே இந்தியாவில் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## ஜனோசன், ஜெரிக் துஷான் பந்துவீச்சில் அசத்தல்

# நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்தை யாழ். மத்திய கல்லூரி அணி கைப்பற்றியது








படங்கள்:-கோபி

(வட்டுக்கோட்டை)

ஜனோஷனின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் மன்னார் சென். சேவியர் கல்லூரி அணியை வீழ்த்தி நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு துறையினரால் நடத்தப்பட்ட கல்லூரி முதல்வர் நோயல் விமலேந்திரனின் வெற்றிக்கிண்ண பாடசாலைகளுக்கிடையிலான இருபது–20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று கல்லூரியின் பிக்னல் மைதானத்தில் நடைபெற்றது.

இத்தொடரில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியா கல்லூரி, யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, கைதடி நவீட் பாடசாலை, மன்னார் சென் சேவியர் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி, கண்டி சென் சில்வெஸ்ரர் கல்லூரி ஆகிய 13 பாடசாலை அணிகள் மோதின.

இதில் அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியை மன்னார் சென் சேவியர் கல்லூரி அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை வென்ற யாழ். மத்திய கல்லூரி அணியும் இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

இறுதிப் போட்டியில நாணயச்சுழற்சியில் வென்ற யாழ். மத்திய கல்லூரி அணித்தலைவர் ஜேம்ஸ் ஜான்ஸன் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் சென் சேவியர் கல்லூரி அணி ஜனோசன்–ஜெரிக்துஷானின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 18.1 ஓவர்களில் 92 ஓட்டங்களை எடுத்து சகலவிக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் மயூரன் 18 ஓட்டங்களை அதிக பட்சமாக எடுத்தார். பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரி சார்பாக ஜனோசன் 3 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் ஜெரிக் தூஷான் 3.1 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி திவாகரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இறுதி வரை பேராடி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 95 ஓட்டங்களை எடுத்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இதில் திவாகர் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும் என். ஜனோசன் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மன்னார் சென்சேவியர்ஸ் கல்லூரி அணி சார்பாக வி.மில்ரன், தனராஜ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் அரவிந், மயூரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது.

இப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியின் வெற்றிக்கு வழியமைத்த என். ஜனோசன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இத் தொடரில் சிறப்பாக ஜொலித்த மன்னார் சென் சேவியர் கல்லூரி அணியின் வி.மில்ரன் தொடர்நாயகன் விருதையும் சிறந்த பந்துவீச்சாளர் (தொடரில் 10 கெட்டுக்கள்) விருதையும் வென்றார்.

அத்துடன் தொடரில் 233 ஓட்டங்களை குவித்து துடுப்பாட்டத்தில் அசத்திய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஜே.நிகேதன் சிறந்த துடுப்பாட்ட வீரராக தெரிவானார்.

இதேவேளை இலங்கையில் பாடசாலை மட்டத்தில் முதல்முதலாக ஆரம்பிக்கப்பட்ட இருபது–20 கிரிக்கெட் தொடர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நடத்தும் நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ணம் என்பதுடன் இம்முறை நடத்தப்பட்ட தொடர் மூன்றாவது என்பதும் குறிப்பிடத்தக்கது. (5-27)

## காம்பீர் அசத்தல் டில்லி அணி வெற்றி

(மொகாலி)

அணித்தலைவர் காம்பீரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் டில்லி டேர்டேவில்ஸ் அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியை வீழ்த்தியது.

ஐ.பி.எல். இருபது–20 தொடரில் நேற்று நடைபெற்ற மூன்றாவது லீக் போட்டியில் காம்பீர் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் சங்கக்கார தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டில்லி டேர்டேவில்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 142 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பொப்ரா 48 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 56 ஓட்டங்களையும் இர்பான் பதான் 21, சங்கக்கார 17 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் நான்ஸ், மகரூப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்டேவில்ஸ் அணி காம்பீரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 19.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 146 ஓட்டங் களைக் குவித்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதில் அணித்தலைவர் காம்பீர் 54 பந்துகளில் (9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 72 ஓட்டங்களையும் நான்ஸ் 24 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 31 ஓட்டங்களையும் தினேஸ் கார்த்திக் 20 ஓட்டங்களையும் எடுத்தனர் பந்துவீச்சில் சிறிசாந் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இவ்வெற்றியின் மூலம் டில்லிடேர்டேவில்ஸ் அணி 2 புள்ளிகளைப்பெற்றது.

# வோர்ன் அணியை 4 ஓட்டங்களால் வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ்

## யூசுப் பதான் சதம் வீணானது

(மும்பை)

திவாரி, நாயுடுவின் சிறப்பான இணைப் பாட்டத்தின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது–20 கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது இதில் முதல் சுற்று ஆட்டத்தின் இரண்டாவது போட்டியில் நேற்று டெண்டுல்கர் தலைமையிலான மும்மை இந்தியன்ஸ் அணியும் ஷேன் வோர்ன் தலைமையிலான இராஜஸ் தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மும்மை இந்தியன்ஸ் அணிக்கு ஜெயசூரியா–டெண்டுல்கர் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் சனத் ஜெயசூரியா 14 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 23 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க மும்பை இந்தியன்ஸ் அணி 3.3 ஓவர்களில் 38 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டை இழந்தது.

அடுத்துவந்த தாரே அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார்.

எனினும் சச்சின் டெண்டுல்கர் 11 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 17 ஓட்டங்களையும் தரே 13 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 23 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்க மும்பை இந்தியன்ஸ் அணி 6.3 ஓவர்களில் 70 ஓட்டங்களை எடுத்து 3 விக் கெட்டுக்களை இழந்தது.

இந்நிலையில் 4 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த திவாரி, நாயுடு ஜோடி அசத்தலான இணைப்பாட்டத்தை வழங்க மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக் கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் நாயுடு 33 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 55 ஓட்டங்களையும் திவாரி 33 பந்துகளில் 4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட, 53 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மாஸ்கரன்ஹாஸ், யூனியல் ஆகியோர் 2 விக்கெட்டுக்களையும் தைட் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 213 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக் குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஆரம்பத்தில் தடுமாறியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் அஸ்னோட்கர் பூச்சியத்துடனும் ஓஜா 12, சிமித் 26, ஜன்ஜன் வாலா 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 9.2 ஓவர்களில் 66 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்தது.

இந்நிலையில் களமிறங்கிய யூசுப்பதான்–டோக்ரா ஜோடி 5 ஆவது விக்கெட்டுக்காக அதிரடியான இணைப்பாட்டத்தை வழங்கியது.

இதில் யூசுப்பதான் 37 பந்துகளில் (9 பவுண்டரிகள், 8 சிக்ஸர்கள் அடங்கலாக) சதம் அடித்து அசத்தி ரண் அவுட் முறையில் ஆட்டமிழக்க ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 17.1 ஓவர்களில் 173 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களை இழந்தது.

அடுத்து களமிறங்கிய வீரர்கள் சோபிக்காத நிலையில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 208 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் டோக்ரா 29 பந்துகளில் 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட 41 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் மலிங்க 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டியில் சதமடித்து (தொடரின் முதலாவது சதம்) ஜொலித்த ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் யூசுப்பதான் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி 2 புள்ளிகளைப் பெற்றது.

## உலகக்கிண்ண ஹொக்கி அவுஸ்திரேலிய அணி சம்பியன்

(புதுடில்லி)

உலகக்கிண்ண ஹொக்கி தொடரின் இறுதிப்போட்டியில் ஜேர்மனி அணியை வீழ்த்தி அவுஸ்திரேலிய அணி சம்பியனானது.


உலகக்கிண்ண ஹொக்கி தொடர் இந்தியாவின் தலைநகர் புதுடில்லியின் நடைபெற்றது.

நடை பெற்ற இத் தொடரில் நேற்று இறுதிப் போட்டியில் நடப்பு சம்பியன் ஜேர்மனி அணியும் அவுஸ்திரேலிய அணியும் மோதின.

இதில் அவுஸ்திரேலிய அணி 2:1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி அணியை வீழ்த்தி சம்பியனானது.

...அநகர சபை, யாழ்ப்பாணம்,





13 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் பிறந்து பிரான்சிஸ்கள் சபைத் துறவியாக வாழ்ந்த தூய அந்தோனியாரின் உடலில் அழியாத் திருப்பண்டங்கள் தூய அந்தோனியாரின் திருச்சொரூபம் ஒன்றின் மார்புக் பகுதியில் பொறிக்கப்பட்டு மக்களின் வணக்கத் துக்காக யாழ்ப்பாணத்துக்கு நேற்று எடுத்து வரப்பட்டது. மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்தில் வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படத்தை காணலாம்.

# ஓமந்தை வரை யாழ்தேவி வரும்

(கொழும்பு)

யாழ்தேவி புகையிரத சேவையை அடுத்த மாதம் முதல் ஓமந்தை வரை நீடிக்கவுள்ளதாகப் புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தாண்டிக்குளத்தில் இருந்து ஓமந்தை வரையான புகையிரதப் பாதையை புனரமைக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளதாக புகையிரத சேவை பதில் முகாமையாளர் சந்திரதிலக தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவிய வன்முறை காரணமாக 90 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வட பகுதிக்கான பல புகையிரத சேவைகள் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## கிழக்கு, தென்கிழக்கு...

வெளியேறுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் கலாநிதி பத்மநாதனை பதவியில் இருந்து விலகுமாறு வற்புறுத்திய மாணவர் பேரவை பிரதிநிதிகளுக்கும் இதன் காரணமாக மாணவர் பேரவையைக் கலைக்குமாறு கோரிக்கையை முன்வைத்த மாணவர்களுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனால் சுமுக நிலையை ஏற்படுத்தும் வகையில் வைத்தியபீடம் தவிர்ந்த ஏனைய பீடங்களின் விரிவுரைகளை இடைநிறுத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டதாக பதில் துணைவேந்தர் கலாநிதி கே.பிறேம்குமார் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாணவர் பேரவை தேர்தலின் பின்னர் இரண்டு மாணவக் குழுக்களுக்கிடையே அமைதியற்ற சூழ்நிலை காணப்பட்டதாகவும் இதனையடுத்தே விரிவுரைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்ய முடிவெடுக்கப்பட்டதாகத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மன்சூர் ஏ.காதர் கூறினார். (ந-5)

## பிரபாக...

என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது கனடாவில் வசிக்கும் பிரபாகரனின் சகோதரியான வினோதினி இராஜேந்திரன் தன்னுடைய தாயாரை அழைத் துச் செல்வதற்காக மலேசியா வந்துள்ளார் என்றும் கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ந-5)

## 11 ஆயிரம் புலிப் போராளிக...

பாற்பண்ணை உள்ளிட்ட விவசாயப் பண்ணைகள் அமைக்கப்படவுள்ளன. இவ்வாறு ஆறு பண்ணைகள் அமைத்து அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகள் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள்.

அலை-கந்தளாய், கண்டல்காடு, திருக்கோணமடு ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்படவுள்ள இப் பண்ணைகள் மொத்தமாக 11 ஆயிரம் ஏக்கர் பரப்பளவைக் கொண்டிருக்கும்.

அத்துடன் திருமணம் செய்த சந்தேக நபர்களின் குடும்பங்களையும் இணைத்து வாழ வைத்தல் என்ற பெயரில் இன்னொரு திட்டத்தையும் அரசு முன்னெடுக்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாக வலயம் 5எனக் குறிப்பிடப்படும் மினிக் முகாம் பகுதியில் 142 குடும்பங்களையும் 11 குழந்தைகளைக் கொண்ட 8 தாய்மார்களையும் குடியமர்த்தும் திட்டம் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் இவ்வாறான குடும்பமாகத் தடுத்து வைக்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இவ்வாறு மெனிக் முகாம் பகுதியில் தொடர்ந்து தடுத்து வைக்கப்படவுள்ள திருமணம் செய்த குடும்பத்தினர்கள் இராணுவத்தின் கண்காணிப்பின் கீழ் சுதந்திரமாக வைக்கப்படுவார்கள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## பொதுத்...

துள்ளார்.

குறிப்பாக அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கும் ஜனாதிபதியைப் படுகொலை செய்வதற்கும் பொன்சேகா சதித் திட்டம் தீட்டியதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தில் கடமையாற்றிய காலத்தில் மேற்கொண்ட குற்றச் செயல்களின் காரணமாகவே பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னதாக ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராகத் தண்டனை வழங்குவதற்கே அரசாங்கம் முயற்சி மேற்கொண்டு வருகின்றது.

பொன்சேகாவுக்கு வாக்களிப்பதில் பயன் இல்லை என மக்கள் கருதக் கூடிய ஓர் பின்னணியை உருவாக்குவதே அரசாங்கத்தின் எண்ணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

## அமெரிக்கா...

டுத் தொடர்பில் இலங்கை அரசாங்கம் சார்பில் கருத்துவெளியிட்ட கெஹலிய ரம்புக்வெல, அமெரிக்கா இவ்வாறான கருத்தினை கடந்த நான்கு வருடங்களாக கூறி வருகின்றது.

இது அவர்களின் வழமையான நடவடிக்கை. தமது நிறுவனங்கள் இயங்குகின்றது என காட்டுவதற்காக இவ்வாறான அறிக்கைகளை அடிக்கடி விட்டு கொள்வார்கள். ஆனால் நாம் அதனைப்பற்றி கவலைப்படவில்லை என கூறியுள்ளார். (ந-5)

## புலிகளின் சர்வதேச வலை...

விடுதலைப்புலிகள் சர்வதேச ரீதியில் மேற்கொண்டு வரும் ஆயுத வியாபாரம் உள்ளிட்ட வர்த்தக நடவடிக்கைகளில் கிடைக்கும் இலாபத்தை மெக்சிக்கோவில் உள்ள மூன்று வங்கிக் கணக்கில் வைப்பில் இட்டு வருவது குறித்த சில சாட்சியங்களையும் முன்வைக்க அந்த அதிகாரி திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை விடுதலைப்புலிகள் அமைப்பில் உள்தரப்பு மோதல்களை எதிர்கொள்ள முடியாததால் மலேசியப் புலனாய்வுப் பிரிவினருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட முழுமையான இணக்கத்தின் அடிப்படையில் கே.பி. இலங்கையிடம் சரணடைந்ததாகக் கூறப்படுகின்றது.

கே.பி. விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பில் வெளியில் தெரியும் நபராக இருந்தபோதிலும் சர்வதேச வலையமைப்பை வேறொருவரே வழிநடத்தி வருவதாக இந்தியப் புலனாய்வுப் பிரிவினரின் நிலைப்பாடாகவுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் உயிருடன் இருப்பதாகவும் தகவல் ஒன்று கிடைத்துள்ளதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உள்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொட்டம்மான் சமாதான உடன்படிக்கைக் காலத்தில் எந்தப் பேச்சுவார்த்தைகளிலும் கலந்து கொள்ளவில்லை. அவர் குறித்து குறிப்பிட்டுக் கூறக் கூடிய தகவல்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரிடம் இருக்கவில்லை என்பதால் அவரைச் சிக்க வைக்க முடியாது போனதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் விடுதலைப்புலிகளுக்கிடையில் சில பிளவுகள் ஏற்பட்டிருப்பதன் காரணமாக பொட்டம்மான் அந்த அமைப்பின் தலைமைத்துவத்துக்குப் போட்டியிடவில்லை எனவும் அவர் அரசியல் அழுத்தங்களை ஏற்படுத்தும் முனைப்புக்களில் ஈடுபட்டு வருவதாகவும் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் மூலம் உறுதியாகியுள்ளதாக லங்கா நியூஸ் வெப் தகவல் வெளியிட்டு உள்ளது. (ந-5)

DIPLOMA IN ENGLISH
Grammar, Speaking & Pronunciations
Reading, Listening, Writing, Vocabulary..etc
SPOKEN ENGLISH
இலங்கையில் முதல்முறையாக நாம் மட்டுமே சர்வதேச தரம் வாய்ந்த (ISO Certified) சான்றிதழ் வழங்குகின்றோம்.
Free handouts & cd பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்
அனுபவமிக்க திறமைவாய்ந்த ஆசிரியர்களால் Computer, Online மூலமாக ஆங்கிலத்தில் சரளமாக பேச எழுத வாசிக்க பயிற்சி வழங்கப்படும்
INTERNATIONALCITY COLLEGE
NO 21, Stanly Road (People bank Lane), Jaffna Tel: 0214 901 464
Email: www.icclanka@gmail.com Web: www.icclanka.com.
T.P:-0776642432, 0774 032 051

நியூ சிற்றி றேடேர்ஸ் இடமாற்றம்
சகலவிதமான கசியோ, சிற்றிசன், கைக்கடிகாரங்களையும், சுவர், மேசை மணிக்கூடுகளையும், ஒகன், பெற்றோல் மக்ஸ், அரிக்கன்லாம்பு, சுடுதண்ணிப் போத்தல், ரோச்லைற், எலக்ரோனிக்தராசு, 5K, 10K தராசு, நைலோன்கயிறுகள், பில்ரர், கல்குலேட்டர் மற்றும் சகலவிதமான சைக்கிள் உதிரிப்பாகங்களையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.
நியூ சிற்றி றேடேர்ஸ்
319A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 3226
(அ-4642)













இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்கா... ...தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.